Saturday
# மெயில்
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin
02 - 59
13-11-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=



# சீனாவுக்குப் பதிலடி தந்த ஒபாமா செயல்

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவுக்கு...

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா இடம்பெற வேண்டும் என அமெரிக்க அதிபர் ஒபாமா ஆதரித்து பேசியதை அமெரிக்க பத்திரிகைகள் முதல் பக்கத்தில் பரபரப்பு செய்தியாக வெளியிட்டுள்ளன. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் அண்மைய இந்தியப் பயணம் முக்கிய மைல்கல்லாக அமைந்துவிட்டது. இந்தியாவில் கிடைத்த வரவேற்பும் விருந்தோம்பலும் அவரையும் அவர் மனைவியையும் நெகிழச் செய்துவிட்டது. இந்திய பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பாக ஒபாமா விடுத்த அறிவிப்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பது சிரமமான காரியம் என்ற ரீதியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவில் மும்பை டில்லியில் பயணம் மேற்கொண்ட ஒபாமா தனது பயணத்தின் இறுதிக்கட்டமாக பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அதுவரை இரகசியம் காத்துவந்த ஒபாமா முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட்டார். உலகில் மாறிவரும் சூழலுக்கேற்ப ஐ.நா. சபை திறம்பட செயல்பட உரிய வகையில் சீரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு மாற்றியமைக்கப்படும் போது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஒபாமா இப்படிப் பேசுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இந்தத் தகவலை வெளியிட இரகசியம் காத்தார் என அமெரிக்க பத்திரிகைகள் முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளன. ஒபாமாவின் இந்திய பயணத்தைப் பற்றிக் குறிப்பாக ஒபாமா பாராளுமன்றத்தில் பேசியதைத் தான் பரபரப்பாக வெளியிட்டுள்ளன. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுடன் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்தும் முயற்சியாக ஒபாமாவின் பயணம் அமைந்திருந்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா இடம்பெறுவதற்கு ஆதரவு தெரிவிக்கும் அறிவிப்பை வெளியிடுவதில் கடைசி வரை மௌனமாக இருந்துவிட்டு திடீரென அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதன் பின்னணியில் இருக்கும் இரகசியம் என்ன என்று பத்திரிகைகள் ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளன. பொருளாதார வளர்ச்சியில் சீனா இப்போது உலகின் முன்னணி இடத்திற்கு வந்து கொண்டு இருக்கிறது. அமெரிக்க டொலரின் மதிப்பைக் குறைக்க சீனா முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்நிலையில், சீனாவுக்கு இணையாகப் பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் சக ஆசிய நாடான இந்தியாவுடன் நட்பு பாராட்டுவதன் மூலம் சீனாவுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கை என்ற ரீதியில் ஒபாமாவின் பேச்சை முடிச்சுப்போட்டு அமெரிக்க பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்த செய்திகளின் சாராம்சம் இதுதான்.

**வாஷிங்டன் போஸ்ட்**

அதிபர் ஒபாமா இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் வரை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கான இடம் பற்றி வாய் திறக்காமல் இருந்தார். பாராளுமன்றத்தில் பேசும்போது திடீரென தனது நிலையைத் தெரிவித்தமை ஆச்சரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

**த நியூயோர்க் டைம்ஸ்**

ஐ.நா. பாதுகாப்புச் சபையால் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க அதிபர் ஒபாமா ஆதரவாக பேசியது சீனாவுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையே யென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10 ஆண்டுகளில் 1000 புலிகள் பலி



'கடந்த பத்து ஆண்டுகளில் உலகம் முழுவதும் 1,000 புலிகள் கொல்லப்பட்டுள்ளன' என,வன பாதுகாப்பு சங்கம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.உலகில் புலிகள் இனம் வேகமாக அழிந்து வருகிறது.இதற்கு புலிகள் வேட்டையாடப்படுவது முக்கிய கரணமாக கூறப்படுகிறது. இந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த வன பாதுகாப்பு சங்கம் அண்மையில் புலிகள் கொல்லப்படுவது பற்றிய ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது; கடந்த 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் இந்த ஆண்டு ஏப்ரல் வரை, உலகம் முழுவதும் குறைந்தது 1,069 முதல் அதிகபட்சம் 1,220 புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக ஆய்வில் தெரிந்துள்ளது. புலிகளின் உடலுறுப்புகள் மருந்து பொருளாகவும், அலங்கார பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும்,பெரும்பாலான மக்கள் புலியின் பல் மற்றும் தோல் ஆகியவற்றை வைத்திருந்தால் அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் என்று கருதுகின்றனர். இதனால் புலிகள் வேட்டையாடப்பட்டு,அதன் உடலுறுப்புகள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகின்றன.உலகிலேயே இந்தியாவில் தான் அதிக அளவில் புலிகளின் உடல் பாகங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இதைத்தொடர்ந்து இந்தோனேசியா,நேபாளம்,தாய்லாந்து மற்றும் வியட்நாம் நாடுகளில் புலிகளின் உடல் பாகங்கள் விற்பனையின் முக்கிய பொருளாக விளங்குகின்றன.புலிகள் உடல் பாகங்களுக்கு சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு இருப்பதால் வேட்டையாடப்படுவது அதிகரித்து உள்ளது.இதை தடுப்பதற்கு அரசுத் துறைகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் இணைந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.இருப்பினும், ஆண்டுக்கு சராசரியாக 100 புலிகள் கொல்லப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலக விஞ்ஞானிகள் தரவரிசை...

உயர் கல்விக் கூடங்களில் இருந்து விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை ஆய்வுகளில் ஈடுபட்டு உலகிற்கு புதுப்பது கண்டுபிடிப்புகளை வழங்கும் அறிவார்ந்த மக்கள் நிறைந்துள்ள நாடுகள் எவை என்பது குறித்த 34 ஓ.ஈ.சி.டி. நாடுகளுக்கான ஆய்வறிக்கை வெளியாகியுள்ளது.

உலகத்தில் உள்ள மொத்தம் 34 ஓ.ஈ.சி.டி.நாடுகளை உள்ளடக்கி இந்த ஆய்வு நடத்தப்பட்டது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு அரசு வழங்கும் ஆதரவு, ஒவ்வொரு கண்டு பிடிப்பையும் தரமான முறையில் கண்டறிய வசதி செய்யும் அறிவார்ந்த ஒழுங்கமைப்பு எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞான முயற்சிகள் என்ற அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

டென்மார்க்கின் விஞ்ஞானி காலஞ்சென்ற ருக்கபாக தொடங்கி நீல்ஸ் போவ காலம் ஈறாக டென்மார்க் ஆய்வுகளின் தாக்கட்டுமானம் உயர்ந்ததாகவே இருந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் நவீன ஆராய்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட பணம் பெருந்தொகையாகும். இந்த ஆண்டு மட்டும் இரண்டு மில்லயாட் குறோணர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் ஓகூஸ் பல்கலைக்கழக பௌதிகவியல் துறை விஞ்ஞானி பிளமிங்கு பாசன்பாக்கர் என்பவர் எழுதிய 427 விஞ்ஞானக் கட்டுரைகள் உலக விஞ்ஞானிகளின் கவனத்தைத் தொட்டுள்ளன. அவருடைய 10 ஆய்வுக் கட்டுரைகள் விஞ்ஞான உலகில் பெரும் அவதானிப்பைப் பெற்றதாகப் போற்றப்படுகின்றன. இவைகள் 14,000 தடவைகள் உலக விஞ்ஞானிகளால் அதி சிறந்தவையாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இதுபோல சென்ற மாதம் டென்மார்க் தமிழ் மாணவர்கள் இருவர் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் சைன்டிஸ் பட்டம் வழங்கிய தகவலும் கிடைத்துள்ளது.


மேலும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மட்டுமன்றி தொழில்துறை சார்புதுமைகளைக் கண்டறியவும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென டேனிஸ் அறிவியல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்காக சுமார் 20,000 தொழிற்சாலைகளின் உதவியுடன் ஆற்றல் உள்ள தொழிலாளர்களைத் தேர்வு செய்து தொழிற்றுறைப் புதுமைகளை விருத்தி செய்யவும் முடிவு காணப்பட்டுள்ளது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் மக்கள் தொகைரீதியாக முன்னணி வகிக்கும் நாடுகளின் தரவரிசை: சுவிஸ், சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து, நோர்வே, கொலண்ட், அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான், இந்தியா விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் கட்டுரைகள் ரீதியான தரவரிசை: சுவிஸ், ஐஸ்லாந்து, டென்மார்க், கொலண்ட், அமெரிக்கா, சுவீடன், பிரிட்டன், பெல்ஜியம், ஜேர்மனி, ஆஸ்திரியா, சீனா, இந்தியா, ரஷ்யா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ள விரும்பியோ, விரும்பாமலோ ஓரணியில் நின்று செயற்பட வேண்டிய பாரியதொரு சமூக கடமை மலையக மக்களுக்கு இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நுவரெலியா மாவட்ட புதிய எம்.பி.யான பெருமாள் இராஜதுரை தெரிவித்தார்.



## ‘அரசியல் உரிமைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு தங்கள் பிரதிநிதிகளாக யாரைத் தெரிவுசெய்ய வேண்டுமென்பதில் மலையக மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்’

Saturday மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே இராஜதுரை எம்.பி.இவ்வாறு கூறினார்.அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: கல்வி,குடும்பப் பின்னணி பற்றி?**

**பதில்:** நுவரெலியா மாவட்டத்தின் பலப்பனை தேர்தல் தொகுதியிலுள்ள உடபுஸல்லாவை ரொக்லண்ட் பகுதியே எனது பிறப்பிடம். நான் எனது ஆரம்பக் கல்வியை சூரியகஹபத்தன தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலை கல்வியை உடபுஸல்லாவ டலோஸ் தமிழ் வித்தியாலயத்திலும் உயர்தரத்தை ராகலை தமிழ் மகா வித்தியாலயத்திலும் மேற்கொண்டேன். 1990 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தக பிரிவில் நுவரெலியா மாவட்டத்தில் அதி சிறந்த சித்தியை பெற்று ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப் படிப்புக்கு தெரிவானேன். அதேநேரம் 1991 ஆம் ஆண்டில் சட்டக்கல்லூரிக்கு தெரிவாகி 1992-1996 வரையான காலப் பகுதியில் சட்டம் பயின்று சட்டத்தரணியானேன். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் சட்டக் கல்லூரி தமிழ் மாணவர் சங்கத் தலைவராகவும் (1994) இருந்தேன்.இக் காலப்பகுதியில் பல்வேறு போட்டிகளிலும் பங்கு பற்றி பதக்கங்கள்,சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை பெற்றிருக்கிறேன்.எனது குடும்பம் அரசியல் பின்னணி எதுவுமில்லாதது.இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் அழைப்பின் பேரிலேயே அரசியலுக்கு பிரவேசித்து கடந்த பொதுத் தேர்தல் மூலம் பாராளுமன்றம் தெரிவானேன்.

நான் திருமணம் செய்து 3 பிள்ளைகள் இருக்கின்றனர்.4 சகோதர சகோதரிகளும் இருக்கின்றனர்.

**கேள்வி: அரசியல் பிரவேசத்துக்கான நோக்கம்?**

**பதில்:** நான் எனது சட்டத்தரணி தொழிலை கொழும்பில் செய்திருந்தால் பணம் ரீதியாக முன்னேற்றம் கண்டிருக்க முடியும்.எனினும் மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் நுவரெலியாவில் சட்டத் தரணியாக பணியாற்றுகிறேன்.இந்த தொழில் மூலம் அம்மக்களுடன் எனக்கு நெருங்கிய உறவு இருக்கின்றது.அந்த மக்களுக்காக இலவசமாக வாதாடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. எனது சட்டத்தரணி தொழிலில் 16 வருடங்கள் நிறைவடைந்து விட்டன.அது மட்டுமல்லாது நுவரெலியா றோட்டரி கழகத்தில் தலைவராகவும் நுவரெலியா சட்டத்தரணிகள் சங்க செயலாளராகவும் இருந்துள்ளேன்.மாணவர்களுக்கு புலமைப்பரிசில் போன்ற உதவிகளையும் செய்து வருகிறேன். இவ்வாறு நேரடி அரசியல்வாதியாக இல்லாவிட்டாலும் மக்களுக்காக பல்வேறு சேவைகளில் ஈடுபட்டே வந்துள்ளேன்.எனினும் இதை அதிகமாக செய்ய அதிகாரம் தேவை. எமது மலையக சமுதாயத்தின் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டே அதே சமுதாயத்தின் ஒற்றுமையை சிதறடிக்க சிலர் முயற்சிக்கும்போது தேர்தலுக்கு 2,3 மாதங்களுக்கு முன்னதாகவே அரசியலில் இறங்க முடிவு செய்தேன், அதற்கு இ.தொ.கா.வில் இடமளித்து வாய்ப்பளித்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் ஒருவர் அரசியலில் முன்னேற கட்சியொன்று அவசியம்.

**கேள்வி: அரசியலில் உங்களது இலக்கு?**

**பதில்:** யார் என்ன பேசினாலும் மலையக சமூகம் இன்னும் கல்வி,சுகாதாரம்,பொருளாதாரம்,வீடமைப்பு,போக்குவரத்து போன்ற துறைகளில் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.ஆகவே பின்தங்கிய சமூகம் என்ற வகையில் நாம் கொள்கை,நியாயங்களை போலவே அபிவிருத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.ஆளுங்கட்சியில் இருக்கும்போதே நாம் அதை செய்ய முடியும். அபிவிருத்தி என்பது சலுகை அல்ல. அது மக்களுக்கான உரிமை, அபிவிருத்திப் பணிகளை யாவரும் சமமாக வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. ஆகவே அரசாங்கத்துடன் இணைந்து மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவதே எமது நோக்கம்.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்ட அனுபவம் பற்றி?**

**பதில்:** பாராளுமன்றம் பற்றி படித்திருந்தாலும்,அங்கு நேரடியாக சென்று எம்.பி.க்களுக்கான உரிமைகள்,சிறப்புரிமைகள்,தத்துவங்கள் பற்றி சொல்லும்போது எம்.பி.க்கான அதிகாரம் பற்றி வியப்பாக இருந்தது. இந்த சிறப்புரிமைகளும் அதிகாரங்களும் மக்களின் அபிவிருத்திக்காகவும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்காகவும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மட்டுமே இருக்கும் நிலையில் ஏற்படுத்தப்படும் சட்டங்களால் எமது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

**கேள்வி: புதிய பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயான உறவுகள் பற்றி?**

**பதில்:** 60 இற்கும் அதிகமான புதிய எம்.பி.க்கள் இம்முறை பாராளுமன்றம் வந்துள்ளனர்.இதில் ஏற்கனவே மாகாண சபைகளில் அங்கம் வகித்து அரசியல் அனுபவம் உள்ளவர்களும் இருக்கின்றனர்.என்னை போன்று நேரடியாகவே பாராளுமன்றம் வந்தவர்களும் இருக்கின்றனர். பொதுவாக அனைவரது மத்தியிலும் சுமுகமான உறவுகளே நீடிக்கின்றன.

**கேள்வி: மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** மலையக சமூகம் என்ற வகையில் நாம் ஒரு இருப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.அதற்கு எம்மிடையே ஒற்றுமை அவசியம்..ஆகவே உரிமைகளையும் அரசியல் அபிலாசைகளையும் பூர்த்தி செய்துகொள்ள யாரை தெரிவு செய்ய வேண்டுமென்ற பொறுப்பு மலையக மக்களுக்கு இருக்கிறது. சிலர் வாக்குரிமையை தவறாக புரிந்து கொள்கின்றனர்.ஆகவே, எதிர்காலத்தில் பெரும்பாலான மலையக மக்கள் போலவே ஏனையவர்களும் சமூக ஒற்றுமைக்காக தங்களது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.ஒற்றுமை இருந்தால்தான் உரிமைகளை பெற்று சமூகத்தை வளர்க்க முடியும்.எனவே விரும்பியோ, விரும்பாமலோ ஓரணியில் நின்று எமது அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக்கொள்ளும் ஒன்றுபட்ட நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய பாரிய சமூகக் கடமை எமது மலையக மக்களுக்கு இருக்கிறது.

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதியும் இந்திய அரசியல்வாதிகளும்



கடந்த சில நாட்களாக இந்திய ஊடகங்களை ஒட்டுமொத்தமாக ஆக்கிரமித்துக் கொண்டார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. ஒபாமா குறித்த செய்திகளை ஆங்கில ஊடகங்கள் தொடர்ந்து ஒளிபரப்பி வந்தன. அதேசமயம், மொழி அலைவரிசைகள் அந்த அளவுக்கு அலட்டிக் கொள்ளவில்லை.

ஒபாமாவின் வருகையால் இந்திய மக்களுக்கு என்ன இலாபம் கிடைக்குமோ தெரியவில்லை. ஆனால் அவரது வருகையால், இந்திய அரசியல்வாதிகள் மீதான இந்தியர்களின் எரிச்சலும் கோபமும் ஆதங்கமும் நிச்சயம் அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை காரணம் ஒபாமாவின் செயல்பாடுகள் அப்படி.

ஒபாமாவும் அவரது மனைவி மிச்செலும் மும்பையில் உள்ள ஹோலி நேம் பாடசாலை சென்று தீபாவளியை மாணவர்களுடன் கொண்டாடினர். சிறிய கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், நீட்டி முழக்கி யாரும் பேசவில்லை. இத்தனையாவது வட்டத்தின் சார்பாக என்று கூறி யாரும் மாலை போடவில்லை. இது இந்தியாவுக்கு வினோதமானதாகும். இங்கெல்லாம் அரசியல்வாதிகளின் கூட்டம் எப்படி நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியாததில்லை.

பாடசாலை மாணவ, மாணவியருடன் சேர்ந்து மிச்செல் ஆடிப் பாடினார். ஆனால், ஒபாமா சற்று சங்கோஜப்பட்டார். இருப்பினும் அவரது சங்கோஜம் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. சீக்கிரமே அவரும் ஜோதியில் ஐக்கியமானார். சிறார்களுடன் சேர்ந்து அவரும் ஜாலியாக ஆடினார். உலக வல்லரசின் தலைவரான ஒபாமா மற்றும் அவரது மனைவியுடன் சேர்ந்து ஆடியதால் அந்தக் குழந்தைகளின் முகத்தில் தெரிந்த நம்பிக்கை படு பிரகாசமாக இருந்தது. இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாகத்தான் தெரிகிறது.

இந்த நேரத்தில் ருவிட்டரில் பறந்த செய்திகள் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. ஏன் இந்தியத் தலைவர்கள் இப்படி மக்களோடு மக்களாக கலப்பதில்லை என்பதே அந்தச் செய்திகளின் மையக் கேள்வியாக அமைந்தது.

முன்பு இந்திரா காந்தி, ஆதிவாசி மக்களுடன் சேர்ந்து நடமாடிய காட்சி அடங்கிய புகைப்படம் இந்த நேரத்தில் மனதில் நிழலாடியது ஏன், முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தி கூட அப்படி சில நேரம் நடந்து கொண்டுள்ளார். ஆனால், அதெல்லாம் ராஜீவுடன் முடிந்து விட்டது. அதன் பிறகு அப்படிப்பட்ட 'டான்ஸை' பார்க்க முடியவில்லை. ஆனால், அரசியல்வாதிகள் அவர்களது 'இசைக்கு' நம்மை 'ஆட்டுவித்து' வேடிக்கை பார்க்கும் சம்பவங்கள் நிறையவே நடக்கின்றன அதற்கப் பஞ்சமே இல்லை.

இந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்ட பின்னர் மும்பையின் பெருமைமிகு சென் சேவியர் கல்லூரிக்குச் சென்றார் ஒபாமா. ஒபாமாவைக் காண ஊடகங்களும் மக்களும் பார்வையாளர்களும் பெரும் ஆர்வத்துடன் காணப்பட்டனர். மிச்செல் ஒபாமா தொடக்க உரையாற்றினார். தனது பேச்சின் போது சாதாரண கேள்விகளை ஒபாமாவிடம் கேட்காதீர்கள். மாறாக பதில் சொல்லத் திணறும் வகையில் கடினமான கேள்விகளைக் கேளுங்கள் என்றும் கூறி கூட்டத்தினரை உற்சாகப்படுத்தினார். கேள்விகள் கேட்க மேலும் அந்த மேடையில் ஒபாமா மட்டுமே இருந்தார். இதுவும் இந்தியாவில் [illegible] காட்சியாகும். யாராவது இப்படி ஒரு இந்தத் தலைவரைப் பார்த்து கடினமான கேள்விகளை கேளுங்கள் என்று அவரை வைத்துக் கொண்டு கூற முடியுமா?

செயின் சேவியர் கல்லூரியில் நடந்ததை உன்னிப்பாகப் பாருங்கள் எட்டு கேள்விகள் வரை ஒபாமாவிடம் கேட்கலாம் எனக் கூறப்பட்டிருந்தது.ஆனால் கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு ஒபாமா சளைக்காமல் பதிலளித்தார்.

இங்கும் இந்திய மக்களின் ஏக்கத்தைத் தூண்டி விட்டுள்ளது ஒபாமாவின் சளைக்காத பதில்கள் இந்தியத் தலைவர்களிடம் இப்படிக் கேட்க முடியுமா? இப்படியெல்லாம் கேள்வி கேட்பதை ஒருபோதும் விரும்பாதவர்கள் இந்தியத் தலைவர்கள்.தேர்தலின் போது மட்டுமே அவர்கள் மக்களிடம் வருகிறார்கள்.மேலும் மக்கள் தங்களது பிரச்சினைகளுக்காக தலைவர்களை அணுகுவது அவர்களை கேள்வி கேட்பதெல்லாம் நடக்கவே முடியாத காரியங்கள்.

அதேபோல டவுஹோல் கூட்டத்தை முடித்துக் கொண்ட பின்னர் அங்கு கூடியிருந்த மக்களிடம் சென்று கை குலுக்கினார் ஒபாமா .அவரது பாதுகாவலர்கள் இரு தரப்புக்கும் இடையே தூரத்தை கடைப்பிடித்தனரே தவிர, ஒபாமா மக்களிடம் கை குலுக்குவதையோ மக்களின் ஆர்வத்தை தடுக்கவோ அவர்கள் முயலவே இல்லை.

இந்திய பாதுகாப்பை இங்கு எண்ணிப் பாருங்கள் எங்காவது இந்திய அரசியல் தலைவர் யாராவது இப்படி மக்களுடன் கை குலுக்கியுள்ளார்களா? அல்லது நாம் கைது குலுக்கப்போனால் பாதுகாவலர்கள் அதை அனுமதிப்பார்களா? ஒருவேளை மேற்கத்திய மக்களைப் போல நமது மக்கள் பழக மாட்டார்கள் என அரசியல்வாதிகள் நினைக்கிறார்களோ என்னமோ.

மேற்கத்திய அரசியல்வாதிகளுக்கு நகைச்சுவை உணர்வு சிறப்பாக இருக்கும்.அதை மக்களிடம் சுதந்திரமாகவும் வெளிப்படுத்துவார்கள்.மும்பையில் நடந்த இந்திய தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசியபோது ஒபாமா அதை சரியாக செய்தார்.

அவர் தனது பேச்சின் போது தேர்தல் முடிவுகள் நமக்கு பாதகமாக இருந்தாலும் கூட ஜனநாயகத்தின் சிறப்புகள் மகத்தானவை என்று அவர் பேசியபோது அரங்கே சிரித்தது.அமெரிக்க இடைத் தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சி தோல்வியைத் தழுவியதை மறைமுகமாக சுட்டிக்காட்டி அவர் பேசியதன் உள்ளர்த்தத்தை உணர்ந்து கூட்டத்தினர் சிரித்தனர்.ஆனால் இப்படியெல்லாம் எதையுமே சாதாரணமாக எடுத்து அதை நகைச்சுவை உணர்வுடன் சொல்லும் இந்திய அரசியல்வாதிகள் கிட்டத்தட்ட இல்லை என்று கூறலாம் சிரிக்காமலேயே இருந்த பிரதமரைப் பார்த்த நாடல்லவா இந்தியா.

இப்படி இந்திய அரசியல்வாதிகளிடம் உள்ள எதிர்மறையான விடயங்கள் எத்தனை ஒபாமாககள் வந்தாலும் நாளுக்கு நாள் அதிகரிக்குமே தவிர குறையும் என்று கூற முடியாது.ஆனால் அது மக்களைத் தான் பாதிக்குமே தவிர நிச்சயமாக அவர்களை பாதிக்கவில்லை பாதிக்கவும் செய்யாது.

எது எப்படி இருந்தாலும் வாழ்க்கை வழக்கம் போலத்தான் நடக்கப் போகிறது நமக்கும் நம்மைச் சுற்றியுள்ள அரசியல்வாதிகளுக்கும்.

**பி.ஜி.மகேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் காதலர் பூங்கா



இலங்கையில் காதலர்களுக்கென 'காதலர் பூங்கா'க்கள் அமைக்கப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளமையானது காதலர்களுக்கெல்லாம் இனிப்பான செய்தியாகவுள்ள போதும் இதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் குறித்து சமூக ஆர்வலர்கள் பலர் கவலை வெளியிட்டுள்ள அதேவேளை, இக்காதலர்கள் பூங்காக்களுக்கு ஆதரவான கருத்துகளே பரவலாகக் காணப்படுகின்றன.

இனிமேல் காதல் ஜோடிகளில் அருவருப்பான தொல்லைகளின்றி தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாமென பொதுமக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் அதேவேளை வேறு நபர்களின் தொல்லைகள் இடையூறுகளின்றி தமது காதல் லீலைகளை அரங்கேற்ற முடியுமென்பதால் காதலர்கள் பலர் பூரித்துப் போயுள்ளதுடன் அரசுக்கு தாம் கடமைப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

பொது இடங்களில் அநாகரிகமாக நடந்துகொள்ளும் காதல் ஜோடிகள் தினமும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வரும் நிலையிலேயே அவர்களுக்கென ஒரு இடத்தை ஒதுக்கிவிட்டால் என்னவென்ற சிந்தனை அரசுக்கு ஏற்பட்டதாக கூறப்படுகின்ற போதும் இவ்வாறான பூங்காக்களை அமைத்து அதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்டவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

காதல் ஜோடிகளினால் பொது இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அருவருக்கத்தக்க செயல்கள்,பொது மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன.அதிலும் குறிப்பாக மதஸ்தாபனங்களிலும் பஸ்களிலும்ஹோட்டல்களிலும் பொது இடங்களிலும் இவர்கள் நடந்துகொள்ளும் விதம் மிகவும் மோசமாகவுள்ளது. பொது இடங்களுக்குக் கூட குடும்பத்தினருடன் சிறுபிள்ளைகளை கூட்டிச் செல்லமுடியாத நிலையினை காதல் ஜோடியினர் ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தும் வகையில் ஒன்று கூடுகின்ற இக்காதலர்களுக்கென தனியான பூங்கா அமைப்பது அவர்களின் எதிர்கால வாழ்விற்கு எவ்வகையில் நன்மையளிக்கும் என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.

இளம் ஜோடிகள் தமது உணர்வுகளை ஒருவருக்கு ஒருவர் தடையின்றி வெளிப்படுத்த வழிசெய்ய வேண்டுமென்பதற்கே இச்சிறப்புப் பூங்காவை அமைக்கவுள்ளதாக தேசிய இளைஞர் மன்றத்தின் தலைவர் லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார்.

காதலர்களுக்கான தனியான பூங்கா ஒன்றை அமைக்க வேண்டுமென்பது தமது நீண்ட காலத்திட்டமென்றும் காதலர்கள் சௌகரியமாக சந்தித்து மகிழ்வதற்கு உரிய இடத்தை ஏற்பாடு செய்யத் தவறியதன் காரணமாக காதலர்கள் அனுபவித்த சிரமங்களுக்கு தானும் ஒருவகையில் பொறுப்பு என்று இளைஞர் விவகார அமைச்சர் கவலைப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

சிறுவர்களை அனுமதிக்காத அதே வேளை வயதுக்கட்டுப்பாடின்றி சமுகமளிக்கக்கூடிய வகையிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முதலாவது பூங்கா மேல்மாகாணத்தில் தியவன்னா ஆற்றங்கரையில் உள்ள ஏழு ஏக்கர் காணியில் அமைக்கப்படவுள்ளது.இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இளைஞர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பூங்கா காதலர்களுக்கு நன்மை பயக்கின்ற போதும் அவர்களின் எதிர்காலத்தை வழிகளில் வீணடிப்பதற்கான திட்டங்களை இப்பூங்கா ஏற்படுத்தவுள்ளதாக விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

காதலர்களின் ஆனந்தமான வாழ்க்கைக்காக தலைநகர் உட்பட பல மாவட்டங்களிலும் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள இப்பூங்காக்களினால் இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலமும் வீணாகக்கூடிய நிலைமை தோன்றியுள்ளன.

கடந்த காலங்களில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட காதலர் வேட்டை நடவடிக்கைகள் காதலர்களுக்கு கசப்பானதாக இருப்பினும் பொதுமக்களுக்கு பெரு வரவேற்பு காணப்பட்டது.இவ்வாறான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டதன் மூலம் பொது இடங்களில் மோசமாக நடந்து கொள்ளும் காதலர்களின் எண்ணிக்கை குறைந்ததுடன் மாணவர்கள் காதலிப்பது தடுக்கப்பட்டிருந்தது.எனினும் இவ்வாறான பூங்காக்கள் மூலம் இலகுவில் மீண்டும் சீரழிவுகள் தலைதூக்கும் என்பதில் ஐயமில்லை.

இளைஞர்கள் என்ற போர்வையில் பாடசாலை மாணவர்களும் இந்தப்பூங்காவிற்கு ஜோடியாக செல்லக்கூடிய நிலை தோன்றவுள்ளது.இதனால் அவர்களது கல்விநிலை பாதிப்படைந்து சிந்தனை வேறு திசைகளுக்குச் செல்லும் நிலை ஏற்படும்.

சமூகமட்டத்தில் இது குறித்து சர்ச்சை எழுந்துள்ள போதிலும் இப்பூங்கா அரசியலுடனோ இனவிவகாரத்துடனோ தொடர்புடையதல்ல எனவும் இளைஞர் தலைமுறையுடன் சம்பந்தப்பட்டது எனவும் இளைஞர்கள் பொதுவாக புதுமை விரும்பிகள் எனவும் இப்படியான இடங்கள் காதலர்களை வேடிக்கை பார்ப்பவர்களால் இலக்கு வைக்கப்படலாம் என சிலர் கவலைப்பட்டாலும் இப்படியான பூங்காக்களை மேலும் பல இடங்களில் அறிமுகப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

காதலர்களின் நலன்கருதி மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளினால் சமூகச் சீரழிவுகள் ஏற்படுமா என்பதை சிந்தித்து அதன் பின்னர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதே சாலச் சிறந்ததாகும்.

**எச்.ஹூஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவறையில் தொடங்கும் இரகசியம்...

பிரசவம் பற்றி எல்லோரும் அறிவர்.பிரசவவலி அதன் தீவிரம் அதுவும் அறிந்தும் அறியாததே எனினும் மழலை மொழியில் ஆனந்தம் யாருக்குத் தான் இருக்காது.விந்தை மிகு கருவறையில் ஒரு கல கருவானது பல்கிப் பெருகி இன்னும் சொல்வதாயின் என்பு நரம்பு என்றெல்லாம் பலவாக வியத்த முறும் விந்தை. இங்கு உருவாகும் கருவானது சிசுவாகி உருப் பெற கருவாக சுமக்கும் கனவை கலையாது காக்க வேண்டியது கடமையே ஆகும்.

இவ்வாறு ஒரு தாயானவள் தனது கருவறையில் சுமக்கின்ற கருவை சிதைக்க இயற்கையில் பல உதிரி நோய்க்கிருமிகள் இன்னும் சொல்லப்போனால் தாயவளின் உடற்தொழிற்பாடுகள் சில இப்படி பல இருக்கின்றன.இவற்றை அறிந்து கொள்ள வேண்டியதும் இவற்றிலிருந்து கருவான அந்த உயிர் உருப் பெற பலவகைப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டியே உள்ளது.இதையே கர்ப்பவதிகள் பிணி ஆய்வு நிலையம் திறம்படச் செய்கின்றது.

இங்கு சிறுநீர் மற்றும் குருதி மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு

★ குருதிச்சோகை

★ பாலியல் நோய்க்கிருமி தொற்று

★ குருதிக்கூட்டம் இதனுடன்

★ குருதி வெல்ல மட்டம் மற்றும்


★ குருதி அமுக்கம் இவை யாவும் சோதிக்கப்படுகின்றன.இவற்றுடன் சிறுநீரக மாதிரியிலிருந்து புரதம் வெளியேறுதல் மற்றும் தொற்று போன்றன இனங்காணப்படும்.

குருதிக் கூட்டம் அறியப்பட்டிருப்பின் தேவைப்படும் போது பிரசவத்தில் குருதியிழப்பு ஏற்படும்போது குருதி மாற்றீட்டை மேற்கொள்ளவும் வகையை அறியவும் உதவும்.



இவற்றைவிட கிருமித்தொற்று காணப்படின் கருச்சிதைவு ஏதுவாகும் தன்மை காணப்படும்.இதை தவிர்க்கவும் குருதிச்சோகையானது இனங் காணப்பட்டு தாயின் நலத்தை பாதிப்பதை தடுக்கவும் சிசுவின் வளர்ச்சியைச் சீராக்கவும் உதவும்.அத்துடன் கர்ப்ப காலத்தில் நீரிழிவு ஏற்படின் குழந்தைக்கும் தாய்க்கும் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்காக வெல்ல மட்டம் சோதிக்கப்படுகின்றது.

இவற்றை விட குருதி அமுக்கம்



உயர்வாகி காணப்படின் அதன் ஊடு வலிப்பு வரையான பின் விளைவுகள் ஏற்படாது தடுக்க இவ்வாறான விடயங்கள் திரையிடப்படுகின்றன.


இவற்றுடன் உடற் சோதனைகள்; (SCAN) மூலம் சிசுவின் வளர்ச்சி நிலை அமைவு சுறுசுறுப்பு போன்றனவும் அறியப்படுகின்றது.இவ்வாறே தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது.அத்துடன் சிலவகை பிறப்புக் குறைபாடுகள் downs syndrome spinbifida போன்றவை ஆய்ந்தறியப்படுவதுடன் பிரசவத்திற்கான எதிர்பார்க்கும் திகதியும் நிர்ணயிக்கப்படுகின்றது.அதாவது சில சமயங்களில் கருத் தடை மாத்திரைப் பயன்பாடு மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் சக்கரம் போன்றன காணப்படுமிடத்து எதிர்பார்க்கப்படும் பிரசவத் திகதி கழியொலி நுண்ணொலி எதிர்வு கூறப்படும்.இவ்வாறே தொடர்ந்தும் கண்காணிக்கப் படுகின்றது.28 கிழமை வரை 4 வாரங்களுக்கு ஒரு தடவை என்ற விகிதத்திலும் இதன் பின் 2 வாரங்களுக்கு ஒரு தடவை என்ற விகிதத்திலும் 36 ஆம் கிழமை வரை தொடர்கின்றது அதன் பின் பிரசவிக்கும் வரை வாராவாரம் மேற்படி கவனிப்புடனும் நகர்கின்றது.

இவ்வாறு கர்ப்பவதிகளிற்கு உரிய சோதனைகள் மேற் கொள்ளப்படுவதென் முழு அளவிலான பயன் பெற பிணியாய்வு நிலையங்களின் உதவியை நாடுதல் சாலவும் நன்று.இந்த ஆலோசனைகள் மற்றும் மாத் திரைகளை ஏற்றவாறு செயற் படல் வேண்டும்.இதன் மூலம் தாய்,சேய் ஆரோக்கியம் பெற்று நல்லாரோக்கியம் மிக்க சமூகத்தை தோற்றுவிக்க முடியும்.

டாக்டர்
வெ.நாகநாதன்
சிவாஜி மருத்துவ
ஆலோசனை மையம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கர்கள் எப்படிப்பட்டவர்கள்?



சூரியனை பூமி சுற்றிவருவதற்கு எத்தனை நாட்கள் ஆகும் என்ற கேள்விக்கு அமெரிக்காவிலுள்ள 49 சதவீதம் பேருக்கு பதில் தெரியாது என்று சமீபத்தில் எடுக்கப்பட்டதொரு ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

மருத்துவம், விண்வெளி எனப் பல்வேறு துறைகளில் உலகின் முன்னணி நாடாக இருக்கும் அமெரிக்காவில் பலர் அடிப்படை விடயங்களைக் கூடத் தெரியாமலுள்ளனர். அமெரிக்கர்களின் உணவுப்பழக்கம், மனப்பாங்கு,நடவடிக்கை,அறிவுக்கூர்மை குறித்து சமீபத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பல தகவல்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்கர்கள் உருளைக்கிழங்குப் பிரியர்களாக உள்ளனர். உருளைக்கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் சிப்ஸ் அங்கு அதிகளவு விற்பனையாகிறது. அமெரிக்கர்கள் கடந்த ஆண்டில் மட்டும் 31 ஆயிரத்து 950 கோடி ரூபாவுக்கு உருளைக்கிழங்கு சிப்ஸ்களை தின்று தீர்த்துள்ளனர். சிப்ஸ் சாப்பிட்டே பல அமெரிக்கர்கள் பொழுதைக் கழிக்கின்றனர்.இதற்காக தங்கள் கையில் உள்ள பணம் முழுவதையும் செலவழிக்க அவர்கள் தயாராகவுள்ளனர். உருளைக்கிழங்கு சிப்ஸ் எண்ணெயில் பொரித்து தயாராவதால் இதை அதிகமாகச் சாப்பிடும் அமெரிக்கர்களின் உடல் எடை அதிகரித்து குண்டாகி விடுகின்றனர். தாங்கள் குண்டானது குறித்தும் யாரும் கவலைப்படாமல் தொடர்ந்து அதிகளவில் சிப்ஸ் தீர்த்து வருகின்றனர்.

தங்கள் நாட்டு மக்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டாமல் குண்டாகி வருவது அமெரிக்க அரசுக்குப் பெரிய தலைவலியாகவுள்ளது. எனவே, உருளைக்கிழங்கை எந்த வகையில் சாப்பிடலாம். அதில் எவ்வளவு சக்தி கிடைக்கும் என்பது குறித்து அமெரிக்க அரசும் கடந்த ஆண்டு ஆய்வு செய்வதற்காக 9 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவழித்துள்ளது. வேலைவாய்ப்பு,பொருளாதார வளர்ச்சி,தேசிய பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்கா செலவிடுவதை விட இது அதிகமாகும். தற்போது உருளைக்கிழங்கு சிப்ஸால் ஏற்படும் ஆபத்தை உணர்ந்துள்ள கல்வி நிறுவனங்கள் அதற்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

அமெரிக்கர்கள் குறித்த மேலும் சுவாரஸ்யமான விடயங்கள் வருமாறு:

அமெரிக்காவில் பாதிக்கும் மேற்பட்ட காப்புரிமைகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சென்றுவிட்டன. பத்தில் ஆறு வெளிநாட்டு நிறுவனங்கள் அமெரிக்க காப்புரிமையைப் பெற்றுள்ளன. அமெரிக்காவில் உள்ள குழந்தைகள் முதல் வாலிபர்கள் வரை சராசரியாக 7.30 மணி நேரம் ரி.வி.,வீடியோ கேம்ஸ்,கம்யூட்டர் ஆகியவற்றுக்காகச் செலவிடுகின்றனர். அமெரிக்காவில் ஒவ்வொரு ஒன்பது வாரத்திற்கும் பொறியியல் ,கணிதம்,அறிவியல் ஆகிய துறைகளுக்குச் செலவிடும் அளவிற்கு உடல் நலத்திற்கும் செலவு செய்யப்படுகிறது.

சூரியனை பூமி சுற்றி வருவதற்கு எத்தனை நாட்கள் ஆகும் என்பது அமெரிக்காவிலுள்ள 49 சதவீதம் பேருக்குத் தெரியாது. அமெரிக்காவில் பொறியியல் படிப்பதைவிட கலைக் கல்லூரிகளில் படிப்பதையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். உயிரியல் மருத்துவ ஆய்வறிக்கை வெளியிடுவதில் தற்போது சீனா இரண்டாமிடம் வகிக்கிறது. அமெரிக்காவிலுள்ள பி.எச்.டி. மாணவர்களுக்குத் தேவையான பாடங்களை முன்னணியில் உள்ள இரண்டு சீன பல்கலைக் கழகங்கள் வழங்கி வருகின்றன.

## ஹரிபொட்டரால் அழியும் ஆந்தைகள்

இந்தியாவில் காட்டு ஆந்தைகள் வேகமாக அழிந்து வருகின்றன. இதற்குக் காரணம் மாயாஜால கதாபாத்திரமான ஹரிபொட்டரின் ரசிகர்கள்தான் என்று இந்தியாவின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷ் குற்றஞ்சாட்டுகின்றார்.

கடந்த பத்து வருட காலத்தில் ஹரிபொட்டர் மற்றும் அவரது செல்லப்பறவையான ஹெட்விக் ஆந்தையைப் பற்றிய நூல்களும் சினிமாக்களும் பிரபலமடைந்து வருவதன் காரணமாக அநேகமான இந்தியர்கள் ஆந்தைகளை செல்லப் பிராணிகளாக வளர்க்க விரும்புவதாக அமைச்சர் ஜெயராம் ரமேஷ் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆந்தைகளை வாங்குவதோ, அல்லது விற்பதோ சட்டவிரோதமானவை.ட்ரபிக் என்ற மிருகங்களைப் பாதுகாக்கும் அமைப்பொன்றின் அறிக்கையின்படி பெரும் எண்ணிக்கையிலான ஆந்தைகள் பொறிவைத்துப் பிடிக்கப்பட்டு விற்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குற்றத்தின் பின்னணியில் தமக்குச் சொந்தமாக ஆந்தைச் செல்லப்பிராணியொன்றை வளர்க்க விரும்பும் ஹரிபொட்டர் விசிறிகளுக்கும் முக்கிய பங்கிருப்பதாக ஜெய்ராம் ரமேஷ் கூறுகின்றார். தமது குழந்தைகளுக்கு ஆந்தைகளைப் பரிசளிக்கும் விநோதமான பழக்கமொன்றைக்கூடச் சிலர் தற்போது கைக்கொண்டு வருகிறார்கள்.

ஆந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த அபாயம் பற்றிய அறிக்கையைத் தயாரித்த அப்ரார் அஹமட், தனது நண்பர் ஒருவர் அவரது மகனது ஹரிபொட்டர் அலங்காரங்களுடனான 10 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டத்துக்காக வெள்ளைநிற ஆந்தையொன்றை விலைக்கு வாங்கித்தருமாறு தன்னிடம் கேட்டதையடுத்தே தான் இந்த ஆய்வில் இறங்கியதாகக் கூறுகிறார்.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை அநேகமானவர்கள் பழங் காலத்து மூட நம்பிக்கைகளுக்காகவும் ஆந்தைகளை வாங்குவதாக அஹமட் கூறுகிறார். சில சித்த வைத்தியர்கள் கூட ஆந்தைகளின் உடற்பாகங்களை மருந்துப் பொருட்களுக்காகவும் மாந்திரீக வேலைகளுக்காகவும் பயன்படுத்துகின்றமை நீண்டகாலமாகவே அங்கு நடைமுறையில் இருந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் எந்த விநாடியும் இறக்கலாம்



சின்னச் சின்ன பிரச்சினைக்கெல்லாம் வாழ்க்கையையே வெறுத்துவிடுவோர் ஏராளம். அப்படிப்பட்டவர்கள் இந்த இங்கிலாந்து சகோதரிகளைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எந்நேரமும் இதயத் துடிப்பு நின்றுவிடக்கூடிய விபரீத நோயுடன் உலாவரும் இம் மூன்று சிறுமிகளும் எப்போதும் முகத்தில் சந்தோசத்தையே காட்டுகிறார்கள்.

சிறுமிகளில் 'ச்லோ' வுக்கு வயது 13, கர்ட்டினிக்கு 12, மெலிஸாவுக்கு 8 வயது.

குணப்படுத்தவே முடியாத ஒரு விபரீதமான பாரம்பரிய இதய வியாதியால் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 'லோங் கியூட்டி சிண்ட்ரோம்' என்ற இந்த வியாதி, 10 ஆயிரம் குழந்தைகளில் ஒன்றுக்கு ஏற்படக்கூடியது.

கர்ட்டினிக்கு 5 வயதில் திடீரென இதய பாதிப்பு ஏற்பட்டது. அப்போதுதான் அவளுக்கும் அவளது இரு சகோதரிகளுக்கும் இந்த நோய் பாதிப்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நோய்க்கு ஆளானவர்களுக்கு இதயம் திடீரெனத் தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்து சட்டென்று நின்றுவிடும். எந்நேரமும் அந்த அபாயம் நேரலாம்.

ஆரம்பத்தில் கர்ட்னியைப் பரிசோதித்த மருத்துவர்கள் ஸ்கொட்லாந்து கிளாஸ்கோவில் உள்ள ரோயல் குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள். அவர்கள் இந்தக் குழந்தைகள் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றே முதலில் கருதினர். ஆனால் கர்ட்னியின் இதயத்தை ஈ.சி.ஜி. எடுத்தபோது அவர் லோங் கியூட்டி சிண்ட்ரோமால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. உடனடியாக கர்ட்னியின் சகோதரிகள் ச்லோ, மெலிஸாவுக்கும் பரிசோதனை நடத்தப்பட்டது. அப்போது அவர்களுக்கும் இந்த நோய் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சிறுமிகளின் தாய் ஷேரோன், இதே நோயால்தான் இறந்திருக்கின்றார். கடந்த 2002 ஆம் ஆண்டில் தனது 25 ஆவது வயதில் இறந்தார் ஷேரோன். அப்போது மெலிஸா பிறந்து சில வாரங்களே ஆகியிருந்தன. இக்குழந்தைகளின் நிலை காரணமாக அவர்களை வீட்டில் இருந்தே கவனித்துக் கொள்கிறார் தந்தை ஸ்டீபன்.

அவர் கூறுகையில் 'என் குழந்தைகள் எல்லோருக்கும் இந்த நோய் இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்துக் கூறியபோது எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அதை தாங்கிக் கொள்ள மெலிஸா ரொம்பவே கஷ்டப்பட்டாள். அதிலும் அவளது அம்மாவும் இதே நோயால்தான் இறந்திருக்கிறாய் என்று அறிந்தபோது இன்னும் துடித்துப்போனாள். இரவில் இவர்கள் தூங்கும்போது கூட திடீரென 'அட்டாக்' ஏற்படலாம். எனவே நான் அவ்வப்போது கண்விழித்துப் பார்த்துக்கொள்கிறேன்' என்றார்.

கர்ட்னி தற்போது மிகவும் சீரியஸான நிலையைக் கடந்துகொண்டிருப்பதால் கடந்த ஏப்ரலில் அவருக்கு இதயத் துடிப்பைக் கண்காணிக்கும் கருவி பொருத்தப்பட்டது. மற்ற இருவருக்கும் கூட அம்மாதிரி பொருத்தப்படவிருக்கிறது. எப்போதும் மருத்துவக் கண்காணிப்பிலேயே இருக்கும் இந்தச் சகோதரிகள் அளவுக்கு அதிகமான சந்தோஷத்தைக் கூட வெளிப்படுத்திவிடாமல் இருப்பது முக்கியம்.

இத்தனை கஷ்டமான சூழ்நிலையிலும் 'நான் எனது மூன்று மகள்களை நினைத்துப் பெருமைப்படுகிறேன். நோய் தங்களை வீழ்த்திவிட அவர்கள் அனுமதிக்கவில்லை' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் ஸ்டீபன்.

# 7000 கார்களுக்கு சொந்தக்காரர்



உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான, புருனே நாட்டின் சுல்தான் ஆடம்பர கார்களை வாங்கி குவிப்பதில் அவருக்கு நிகர் அவர் மட்டுமே.

எண்ணெய் வளமிக்க நாடான புருனே, 1967 இல் தனி நாடானது. அதன் சுல்தானாக (மன்னராக) ஹசனன் போக்கியா முயுசுதீன் வாதுலா இருந்து வருகிறார். எண்ணெய் வளத்தால் கொழிக்கும் அந்நாட்டு சுல்தானின் வருமானத்திற்கு அளவே இல்லாமல் போய் விட்டது. ஒரு விநாடிக்கு அவரது வருவாய் 5,277 ரூபா அதுவே ஒரு வாரத்திற்கு 3,191 கோடி ரூபா அவரது அரண்மனை இரண்டு இலட்சம் சதுர மீற்றர் பரப்பளவு கொண்டது. இங்கு 1,788 அறைகள் உள்ளன. இதுதான் உலகிலுள்ள அரண்மனைகளிலேயே மிகப் பெரியது. இங்கு 275 ஆடம்பர குளியலறைகள் உள்ளன. அதில் உள்ள பொருட்கள் எல்லாம். தங்கம் மற்றும் வெள்ளியினால் செய்யப்பட்டவை. இவரது மகளுக்கு 18 வயது நிரம்பியதும் நடத்தப்பட்ட பிறந்த நாள் கொண்டாட்டத்தில் சுல்தான் அவருக்கு ஏர் பஸ் ஏ-320 விமானம் வழங்கினார். அவர் பயன்படுத்துவதோ போயிங் 747 விமானம்.

இதை எல்லாம் விட வித விதமான கார்களை வாங்கி குவிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் சுல்தான். அவரது கார்நிறுத்துமிடத்தில் தற்போது 7,000 கார்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு 2,312 கோடி ரூபா. அவரிடம் உள்ள 7,000 கார்களில் அதிகளவில் இருப்பவை ரோல்ஸ் ரொய்ஸ் கார்கள் தான். இவற்றின் எண்ணிக்கை மட்டுமே 604 இது தவிர மெர்சிடீஸ் பென்ஸ்-574, பெராரி-452, ஒஸ்டின் மார்ட்டின் - 300, பென்ட்லீ-382, பி.எம். டபிள்யூ-209, ஜாகுவார் 179, போர்ஷெய்-160, கோனிநெக் - 134, லம்போர்க்கினி - 21, மெக்லாரன் எப்1 ரகம்-8, பியூஜோ-5, ஷெல்பி சூப்பர் 1 ஆகியவை குறிப்பிடத்தக்க பிரபலமொடல் கார்கள். இந்த அதிக விலையுள்ள ஆடம்பர கார்களை தவிர மேலும் நான்காயிரம் வெவ்வேறு நிறுவன கார்களும் அவருக்கு சொந்தமாக உள்ளன.

இவ்வளவு கார்களையும் அவரது அரண்மனை அருகே உள்ள விமான நிலையத்தின் ஒரு மூலையில் நிறுத்தி வைத்துள்ளார். கார்கள் நிறுத்தப்படும் இடங்களுக்கு கார் நிறுவனங்களின் பெயர்களையே சூட்டி உள்ளார். அவற்றை பராமரிப்பதற்கென தனித்தனியே நிபுணர்களையும் வைத்துள்ளார். அவர்களுக்கு உணவு, உறைவிடம், கை கொள்ள முடியாத அளவுக்கு சம்பளமும் வழங்கி வருகிறார். அதில் குறிப்பிட்ட சில கார் மெக்கானிக்குகளுக்கு ஆண்டுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது. உலகில் மிக முக்கிய கார் தயாரிப்பு நிறுவனங்களின் அனைத்து பிரபல கார்களும் அவரிடம் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. அதில் ஒரு குறிப்பிட்ட மொடல்கள், அவரது விருப்பத்திற்கேற்ப கார் நிறுவனங்கள் தயாரித்து அளித்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் தீவாகும்

# குடாநாடு



இன்று உலகம் சந்தித்துக் கொண்டிருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினைகளுள் 'சூழல் மாசடைதலும்' ஒன்றாகும்.இயற்கையைக் காயப்படுத்துவதனூடாக மனிதன் தனக்கே இட்டுக் கொள்ளும் சாபமாக இச்செயற்பாடு அமைகின்றது.இதில் அவனால் கொட்டப்படும் திண்மக்கழிவுகளால் நிலம்,நீர் மற்றும் வளி முதலானவை மாசுறுதலுக்குள்ளாகின்றன.

பொதுவாக நகரப்பகுதிகளிலிருந்து இத்தகு திண்மக்கழிவுகள் வெளியேற்றப்பட்டு பொதுவான இடங்களில் அவை கொட்டப்படுவது வழமை.ஆனால் யாழ்.குடா நாட்டைப் பொறுத்தவரை இச்செயற்பாட்டில் அசம்பாவிதங்கள் நடப்பது குறிப்பிடத்தக்கது.

வீதியின் மருங்குகள் மற்றும் பொதுவான பிராந்தியங்களில் இத் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் யாழ்ப்பாணத்தின் நாலா திக்குகளிலிருந்தும் எடுத்து வரப்பட்டு காக்கைதீவில் கொட்டப்பட்டு வரும் கழிவுப் பொருட்களால் பயணிகள் மற்றும் அதனண்டையிலுள்ள 'பொம்மை வெளிப் பிரதேச' மக்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியின் நடுவண் கொட்டப்பட்டு வந்த கழிவுப் பொருட்கள் தற்போது வீதியின் மருங்குகளிலும் கொட்டப்பட்டு வருவதாலே இவ்வாறான சிரமங்களுக்கு அவர்கள் முகங்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நானாவித கழிவுப் பொருட்களும் இவ்வாறு கொட்டப்பட்டு வருகின்றன.இவற்றுள் பாவனையில் தடைசெய்யப்பட்டுள்ள 'பொலித்தீன்' பைகளே மிக அதிகமாகக் காணப்படுகின்றன.உணவுப் பொதிகளுடன் அன்றேல் உணவுகளைச் சுற்றியபடி இவ்வாறு வீசப்பட்டு வரும் பொலித்தீன் பைகளைக் கால்நடைகள் உண்ணக் கூடிய ஏது நிலைகளும் காணப்படுகின்றன.

இதனால் கால்நடைகள் உயிராபத்தைச் சந்திக்க வேண்டியேற்படும் அதேவேளை, இறந்தும் வருகின்றன.இது தவிர இந்தப் பொலித்தீன் பைகள் காற்றில் பறந்து சென்று வீதிகளை 'நிறைத்து' நிற்கும் அதேநேரம்,அண்மையிலுள்ள 'வயற்காணிகளிலும்' தேக்கமடைந்து காணப்படுகின்றன.

குப்பைமேடுகளால் நிறைந்து காணப்படும் காக்கைதீவு 'பொலித்தீன் தீவு' போன்று காட்சியளிக்கின்றது.இத்தகு பைகளில் நீர் தேங்கி நின்று நோய்க்கிருமிகளைப் பெருக்கமடையச் செய்தும் வருகின்றன.இதனால் உயிரினப் பல்லினத்துவத்துக்கும் அழிவுகள் ஏற்படும்.

வயல் நிலங்களில் கொட்டப்பட்டுக் கிடக்கின்ற பொலித்தீன் பைகளால் பல்வேறுபட்ட பாதக விளைவுகள் ஏற்படுகின்றன.இவை நீர்க் கால்வாய்களைத் தடை செய்வதோடு நீருக்குள் செல்லும் ஒளியின் அளவையும் கட்டுப்படுத்துகின்றன.

காக்கைதீவுப் பிரதேசத்தில் மட்டுமன்றி கல்லுண்டாய் வீதிகளின் மருங்குகளிலும் இத்தகு கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டிருப்பதால் போக்குவரத்துச் செய்வோர் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.அது மட்டுமன்றி யாழ்.குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் இத்தகு பிரச்சினைகள் இருப்பது சுட்டத்தக்கது.

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் 'இவ்விடத்தில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம்' எனும் பெயர்ப்பலகைக்கு முன்னால் நானாவித கழிவுகள் அடங்கிய குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக அப்பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று மண்டைதீவுக் கிராமத்திலுள்ள 6 ஆம் வட்டாரத்தில் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பொது இடங்களுக்கு அண்மையில் சுகாதாரக் கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் கொட்டப்பட்டு வருவதாகவும் அதன் பின்னணியில் இருப்பவர்கள் யாரெனத் தெரியாதெனவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

தவிர 6 ஆம் வட்டாரத்திலிருந்து அல்லைப்பிட்டி நோக்கி மேற்காகச் செல்லும் வீதியின் இரு புறங்களிலுமுள்ள திறந்த குடியிருப்புக் காணிகளிலும் வயற் காணிகளிலும் இத்தகு கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலித்தீன் பைகள் தவிர்ந்த ஏனைய திண்மக் கழிவுகளை ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்கு உட்படுத்துவதன் மூலம் சுகாதார சீர்கேடு உள்ளிட்ட பிரச்சினைகளைத் தவிர்க்கின்ற அதேநேரம் சூழலையும் அழகுற வைத்திருக்கலாம்.

அதாவது இத் திண்மக் கழிவுகளைச் சேதன வளமாக்கிகள் மற்றும் எரிபொருட்கள் என்பனவற்றிற்கு உபயோகித்து பொருளாதாரத்தை ஈட்டலாம்.மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தீங்கு பயக்கக் கூடிய 'பிளாஸ்ரிக்' பொருட்கள் மற்றும் 'பொலித்தீன்' பைகள் போன்றனவற்றைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கண்ட கண்ட இடங்களிலெல்லாம் குப்பைகள் கொட்டப்படும்போது அதனை மாநகரசபை 'ஏறெடுத்தும்' பார்ப்பதில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.இது விடயத்தில் அதிக அக்கறை எடுக்க வேண்டிய அவர்களே இவ்வாறு அசமந்தப் போக்கில் செயற்படுவது வரவேற்கக் கூடியதல்ல.

எனவே எம்மைச் சூழவுள்ள சுற்றாடலை நாமே மாசுபடுத்தி 'மரணக் குழிகளை' தோண்டாது அவற்றைச் சுத்தமாகவும் அழகுறவும் பேணி ஆரோக்கியம் காக்க வேண்டும்.இது விடயத்தில் யாழ்.மாநகரசபை 'விழித்துக் கொள்வது' காலத்தின் கட்டாயம்!

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசைப் பூனை

பூனையின் மீசை ரோமங்கள் அதற்கு வெறும் அலங்காரத்திற்காக அமைந்திருப்பவை அல்ல.இரை தேடிச் செல்லும்போது சுற்றுச்சூழலைக் குறித்துப் புரிந்துக்கொள்வதற்கு கண்கள்,காதுகள் முதலிய உறுப்புகளுடன் பூனை அதன் மீசையையும் பயன்படுத்துகிறது.முக்கியமாக இரவு நேரத்தில் இரை தேடுவதற்கு மீசை ரோமங்கள் பெரிதும் உதவுகின்றன.இருண்ட வளைகளுக்குள்ளும் சரக்கு அறைகளுக்குள்ளும் நுழைவதற்கு முன்பு பூனை தன் தலையை முன்னே நீட்டி தன் மீசை ரோமங்களால் சுற்றுச்சூழலை ஆராய்ந்து புரிந்து கொள்கிறது.பூனையின் முக்கியமான உணரும் உறுப்புகளில் ஒன்றுதான் அதன் மீசை ரோமம்.






## படிக்க... பாதுகாக்க...

- ★ சங்குகள் பற்றிய படிப்பு - காங்காலொஜி
- ★ சின்னங்கள் பற்றிய படிப்பு - ஜகனாலொஜி
- ★ பாசிகள் பற்றிய படிப்பு - பைகாலலொஜி
- ★ தோல் பற்றிய படிப்பு - டெர்மட்டாலொஜி
- ★ குகைகள் பற்றிய படிப்பு - ஸ்பெலியாலொஜி
- ★ பூச்சிகள் பற்றிய படிப்பு - எண்டோமாலொஜி
- ★ பாறைகள் பற்றிய படிப்பு - லிதாலொஜி
- ★ மரங்கள் பற்றிய படிப்பு - டெண்ட்ராலொஜி
- ★ பறவைகள் பற்றிய படிப்பு - ஆர்னித்தாலொஜி
- ★ தசைகள் பற்றிய படிப்பு - மையாலொஜி
- ★ செல்,திசுக்கள் பற்றிய படிப்பு - ஹிஸ்டாலொஜி
- ★ திமிங்கிலங்கள் பற்றிய படிப்பு - செடாலொஜி

## குறுக்கெழுத்துப்போட்டி - 59

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ✱ | 4 | 5 |
| 6 | ✱ | 7 | 8 | 9 | ✱ |
| 10 | ✱ | 11 | 12 | 13 | ✱ |
| 14 | 15 | 16 | 17 | ✱ | 18 |
| ✱ | 19 | ✱ | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | ✱ | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. வல்லரசு நாட்டை ஆளும் கறுப்பினத் தலைவர்
4. பள்ளம் என்றும் சொல்லலாம்
7. இந்தியாவை ஆட்சி புரியும் குடும்பம்
11. நெருப்புத்துண்டை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
14. பகை (குழம்பியுள்ளது)
20. ஆணவம் என்றும் கூறுவர்
23. மத்திய மாகாணத்தின் பிரதான நகர்
26. திறப்பு

**மேலிருந்து கீழ்**

1. உளவாளி என்றும் சொல்லலாம்
3. இலங்கையில் இது 9 உண்டு
4. வீட்டைச் சுற்றியுள்ளது
8. தீயைப் போல் பரவுவது (குழம்பியுள்ளது)
15. முட்டாள் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
18. பைத்தியம் (குழம்பியுள்ளது)
21. கடவுளை சிலர் இப்படியும் அழைப்பர் (தலைகீழ்)

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 57 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சமல் | 1. சதாம் |
| 4. இடி | 2. மரை |
| 6. தாமரை | 3. மணல் |
| 11. மரணம் | 5. மகுடி |
| 17. தரை | 13. ரதம் |
| 19. கும்பி | 15. தலம் |
| 22. இலங்கை | 17. இரை |
| | 19. குகை |
| | 21. பிணி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எஸ்.வரதராஜன்,**
**இல. 25/5, மாரியம்மன் கோயில் வீதி,**
**கல்லடி, மட்டக்களப்பு.**

### பாராட்டுப் பெறுவோர்

01. வி.சதுயனன்,
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

02. கிருஷ்ணசாமி அருள்,
கொக்காகலை,
மடுல்சீமை.

03. இ.சிவபாலன்,
உப்புக்கேணி வீதி,
பெரிய மாவடி, சாவகச்சேரி.

04. ஏ.ரேவதி,
இல. 152, பாஸ்கர் ஸ்ருடியோ,
பெரியகடை, மன்னார்.

05. ம.சங்கீதன்,
முனியப்பர் கோவிலடி,
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை.

*உங்கள் விடைகளை*
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15**
*என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...*

## தெரிந்துகொள்ளுங்கள்

★ மனிதனுடன் உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவை மனிதனை விட சில விடயங்களில் அதிக ஆற்றல் மிக்கவையாக இருக்கும். அவற்றைப் பற்றி பார்ப்போம்.

★ சீல்கள் மணிக்கு 23 கி.மீ.வேகத்தில் நீந்தும்.

★ அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

★ கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

★ பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

★ மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.

★ உலகில் முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் மீன்.

★ உலகிலேயே அதிக குரங்கினங்கள் வாழும் நாடு பிரேஸில்.

★ குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

★ புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ.வரை பறக்கும்.

★ ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.

★ இந்தியாவில் இந்திராகாந்தி சரணாலயத்தில் மட்டுமே எறும்புத்தின்னி உள்ளது.

★ காளான்களில் சுமார் 70 ஆயிரம் வகைகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர நாவலில் வரலாறு படைத்த சாண்டில்யன்

கலைமாமணி விக்கிரமன்

சாண்டில்யன்-வரலாற்றுப் புதினங்களை விரும்பிப் படிக்கும் வாசகர்களால் இந்தப் பெயரை மறக்கவே முடியாது.கடந்த 6.11.2010 அன்று சென்னையில் நடைபெற்ற தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள திரு இந்தளூர் அவரது சொந்த ஊர் 1910 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி டி.ஆர்.சடகோபன் ஐயங்காருக்கும் பூங்கோதை வல்லி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.பிறந்த ஊர் திருக்கோவிலூர்.அவரது இயற்பெயர் எஸ்.பாஷ்யம்.

கல்லூரிப் படிப்பில் இன்டர்மீடியட் படித்தார்.அப்போதே அவருக்குத் தேசிய இயக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது.காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கிய பிறகு சென்னை வந்த அவருக்கு அறிஞர் வெ.சாமிநாத சர்மா,கல்கி போன்றோர் நண்பர்களாயினர்.இருவருடனும் பழகியதால் சிறுகதை எழுதும் ஆர்வம் ஏற்பட்டது.அந்நாளில் திராவிடன் இதழாசிரியர் தோழர் சுப்பிரமணியம் நண்பரானார். அவருடைய திராவிடன் இதழில் சாந்தசீலன் என்ற சிறுகதையை எழுதினார்.அந்தக் கதையைப் படித்த கல்கி அவர் ஆசிரியராக இருந்த ஆனந்த விகடனில் எழுத வற்புறுத்தினார்.சாமிநாத சர்மா ஆசிரியராக இருந்த நவசக்தியிலும் சாண்டில்யனின் கட்டுரைகள் வெளிவந்தன.

சாண்டில்யன் எழுதிய பலாத்காரம் என்ற முதல் நாவலுக்கு அந்நாளைய காங்கிரஸ் தலைவர் தீரர் சத்தியமூர்த்தி சிறப்பாக முன்னுரை எழுதியிருக்கிறார்.பிற்காலத்தில் புரட்சிப்பெண் என்ற தலைப்பில் அந்த நாவல் வெளிவந்தது.சாண்டில்யனுக்குத் தன்னம்பிக்கை அதிகம்.ஒரு பாட்டுக்கு மக்கள் மத்தியில் ஐந்து ஆண்டுகள் மட்டுமே மௌசு இருக்கும்.ஆனால், நான் எழுதும் புத்தகங்களுக்கு 500 ஆண்டுகள் மௌசு இருக்கும்.அதனால்தான் நான் எழுத்துத் துறையைத் தேர்ந்தெடுத்தேன் என்று சாண்டில்யனே ஒருமுறை கூறியிருக்கிறார்.

சாண்டில்யனின் எழுத்துத் திறமையை அறிந்த சுதேசமித்திரன் ஆசிரியர் ஸி.ஆர்.சீனிவாசன் அவரை நிருபர் பணியில் அமர்த்தினார்.சாண்டில்யன் உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகள் பற்றிய செய்திகளை எழுதும் நிருபராகப் பணியாற்றினார். சாண்டில்யன் நிருபர்களுக்கு வழக்கு மன்றத்திலிருந்த மரியாதையை கவைபட விபரீத்து ஆங்கில ஏடுகளின் நிருபர்களுக்கு மட்டும் நீதிமன்றத்தில் வசதியாகவும் மற்ற தமிழ்ப் பத்திரிகை நிருபர்கள் நின்றுகொண்டுதான் எழுதவேண்டிய நிலை உள்ளதைச் சுட்டிக் காட்டிப் பேசியும் எழுதியும் வந்தார்.நீதிமன்ற நடவடிக்கைகளை சுதேசமித்திரனில் வெளிவரச் செய்தார்.சுதேசமித்திரன் செய்தி வழக்கறிஞர்களிடையே பரவியது.சாண்டில்யனுக்கு உட்கார நாற்காலி வசதி செய்யப்பட்டது. நீதிமன்ற வழக்குகளை நல்ல தமிழில் சுதேசமித்திரனில் எழுதியதால் சாண்டில்யன் திறமை எங்கும் பேசப்பட்டது.



1937 இல் மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேட்டி கண்டு எழுதினார்.சாண்டில்யனின் மதிப்புணர்ந்த நிர்வாகம் அவரை உதவி ஆசிரியராகப் பதவி உயர்வு அளித்தது.பின்னர் சில கருத்து வேறுபாடு காரணமாக மீண்டும் நிருபர் பதவி தரப்பட்டது.இதனால் கோபமடைந்த சாண்டில்யன் அந்தப் பதவியிலிருந்து விலகி 'ஹிந்துஸ்தான்' வார இதழில் சேர்ந்தார்.

சாண்டில்யனுக்கு சினிமா,நாடகம் பார்ப்பதில் மிகுந்த ஈடுபாடு உண்டு.ஹிந்துஸ்தானில் பணியாற்றியபோதுதான் திரைப்படத்துறையின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.திரைப்படக் கலையில் முன்னணியில் நிற்கவேண்டுமென்று இயற்கையாகவே அவரிடம் இருந்த இலட்சியம் அப்போது நிறைவேறியது.சினிமாவைத் தாக்கி எழுதுபவர்களுக்கு அவர் தன் பேனாவின் வலிமையால் பதில் சொல்லியிருக்கிறார்.சினிமா பற்றி ராஜாஜி கூறிய கருத்துகளை எதிர்த்து சினிமா பார்ப்பது கெடுதலா?என்ற கட்டுரையை 1952 இல் எழுதினார்.

எனக்கு சினிமாவைப் பற்றி ஏதாவது தெரிகிறது என்றால் அதற்குக் காரணமானவர்கள் பி.நாகிரெட்டி,வி.நாகையா,கே.ராம்நாத் ஆகியோர்தான்.பதினான்கு ஆண்டுகள் சினிமா உ[illegible]தெல்லாம் கதை[illegible] ஆறுமாதங்களாகும்.கதையை எழுதினால் மட்டுமே போதாது.ஷூட்டிங் ஸ்கிரிப்ட் தயாரிக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.வி.நாகையாவின் தியாகையா வெற்றிக்கு சாண்டில்யனின் பெரிதும் காரணமானவர் அந்தப்படம் வெளிவந்த பிறகு புகழின் உச்சியில் இருக்கும்போதே திரைப்படத் துறையிலிருந்து விலகிவிட்டார்.

இளம் வயதிலிருந்தே அவரின் இலட்சியம் எழுத்தாளராக வேண்டுமென்பது.பிரபலமாக விற்பனையாகும் பத்திரிகைக்கு ஆசிரியராக வேண்டுமென்பது முதல் எண்ணம்.வெற்றிகரமாக நிறைவேறியது.இரண்டாவது எண்ணம் சொந்தமாகப் பத்திரிகை நடத்தி வெற்றிபெறவில்லை.சில காரணங்களால் மீண்டும் சுதேசமித்திரனில் சேர்ந்தார். ஞாயிறு மலர் என்ற சிறப்புப் பகுதியின் பொறுப்பாளரானார். சுதேசமித்திரன் வாராரப்பத்திரிகையிலும் எழுதினார். அமுதசுரபியில் சரித்திர நிகழ்ச்சிகளை நிலைக்களனாகக்கொண்ட சிறுகதைகளை அவ்வப்போது எழுதினார்.சரித்திர நாவல் எழுதும் தாங்கள் வரலாற்றுப் புதினங்கள் எழுதவேண்டும் என்று அமுதசுரபி நிறுவனத்தார் கேட்டுக்கொண்டதால் ஜீவபூமி என்ற சரித்திரத் தொடரை எழுதினார்.ஜீவபூமி தொடர் பின்னர் பிரபல அமெச்சூர் நாடக மன்றத்தாரால் நாடகமாக அரங்கேற்றப்பட்டது.

ஜீவபூமி தொடருக்குப்பிறகு மலைவாசல் என்ற தொடரை எழுதினார்.மலைவாசல் புதினத்துக்குக் கிடைத்த வாசகர்களின் வரவேற்பால் பல வரலாற்றுப் புதினங்களை எழுத அவருக்கு உற்சாகம் ஏற்பட்டது.கன்னிமாடத்தில் தொடங்கி கடற்புறா (மூன்று பாகங்கள்) யவனாராணி முதலிய பிரம்மாண்டமான நாவல்களை எழுதினார்.மொத்தம் 50 நூல்களை எழுதியுள்ளார்.அவற்றில் 42 சரித்திர நாவல்கள் மற்றவை சமூக நாவல்கள் மற்றும் இலக்கியக் கட்டுரைகள் இவர் எழுதிய மிகப்பெரிய நாவல் கடல்புறா மூன்று பாகங்கள் மொத்தம் 2000 பக்கங்கள் கையெழுத்துப் பிரதிகள் 20,000 பக்கங்களுக்கும் மேல் இந்தியாவிலேயே அதிகம் எழுதி சரித்திரம் படைத்த சாதனையாளர் சாண்டில்யன்தான்.

பத்திரிகையாளர் எழுத்தாளர்,திரைப்படக்கதை வசனகர்த்தா,வரலாற்று நாவலாசிரியர்கள் போன்றோரிடையே முன்னணி இடத்தை தேடிக்கொண்ட[illegible]முகத் திறமைகளோடு முன்னேறிக் கொண்டிருந்த சாண்டில்யன் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான சங்கம் ஒன்றை நிறுவுவதில் பெரும்பாடுபட்டு தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தைத் தொடங்கினார்.அது தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனம் என்ற பெயரில் பிரபலமடைந்தது.தனக்கு நியாயம் எனத் தோன்றாததை எதிர்த்து அவர் பேனா சீறிப்பாயும் நாடகமோ,திரைப்படமோ,சமுதாயத்துக்குத் தீங்கு விளைவிக்கும் என்று தெரிந்தால் போர்க்கொடி உயர்த்தத் தயங்கமாட்டார்.நண்பர் என்றும் வேண்டியவர் என்றும் பார்க்கமாட்டார்.

சரித்திரக் கதை சக்கரவர்த்தி சாண்டில்யன் சீனத்துச் சிங்காரி என்ற தொடரை குமுதம் வார இதழில் எழுதத் தொடங்கியபோது திடீரென நோய்வாய்ப்பட்டார்.மரணப்படுக்கையிலும் அந்தக்கதையை எழுதினார்.

# இலக்கிய சுவை...

மருத்துவமனையில் இருந்தபோதும் மீண்டும் வீட்டுக்கு வந்த பிறகும் சாண்டில்யனைச் சந்தித்துப் பேசும்போது சீனத்துச் சிங்காரியின் கதையைப் பற்றி நாங்கள் விவாதிப்பது வழக்கம்.இதையறிந்த குமுதம் பதிப்பாளர் என்னிடம் நீங்கள்தான் சீனத்து சிங்காரியைத் தொடரவேண்டும் என்று வற்புறுத்தினார்.சாண்டில்யன் எழுத்து எங்கே?என் எழுத்து எங்கே?அவர் எழுத்துபட்டு நூல் என்னுடையது பருத்தி நூல்.இரண்டையும் சேர்த்துப் பட்டாடை நெய்து முடிப்பது சரியாகாது என்று மறுத்துவிட்டேன்.முடிவடையா கோபுரமாய் சீனத்துச் சிங்காரி நின்றுவிட்டது.

சாண்டில்யனுக்கு அளிக்கப்பட்ட தீவிர சிகிச்சை பலனளிக்காமல் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி இயற்கை எய்தினார்.அவரது இரு குமாரர்களில் மூத்தவர் சடகோபன் பேராசிரியர்.இளையவர் கிருஷ்ணன்,வைஷ்ணவ கல்லூரி முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர்.மகள்களுள் ஒருவரான பத்மா சாண்டில்யன் இசையில் மிகவும் சிறந்து விளங்குகிறார்.எழுத்துலகில் நிலை நிற்கத்தக்க அழியாத பல படைப்புகளை நல்கி வாசகர்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்றவர் சாண்டில்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்கு நன்றி கூறும் ஐஸ்



எனக்குத் தொடர்ந்து நல்ல வேடங்கள் கிடைப்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கிறேன் என்று கூறியுள்ளார் ஐஸ்வர்யா ராய். இது குறித்து அவர் கூறுகையில்; எனக்குத் தொடர்ந்து நல்ல படங்களும் வேடங்களும் கிடைக்கின்றன. இதை அதிர்ஷ்டவசமாக உணர்கிறேன். கடவுளுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக நல்ல வேடங்களைக் கொண்ட படங்கள் சரியான இடைவெளியில் என்னைத் தேடி வருவது மகிழ்ச்சி தருகிறது. அதுபோன்ற படங்களில் பழைய நடிகைகள் யாரையும் பின்பற்றி நடிக்க நான் முயல்வதில்லை. நானாகவே அதில் தெரிய ஆசைப்படுகிறேன். ஆக்ஷன் ரீப்ளே படத்திலும் கடந்தப் பழைய நடிகையையும் நான் கொப்பியடிக்கவில்லை. நானே தான் அதில் தெரிந்தேன். 70 களில் உள்ள கதைக்களம் அது. அதற்கேற்ப ஒப்பனை வசன உச்சரிப்பு உள்ளிட்டவை அமைந்துள்ளது. இது கடினமான படம் என்பதை படத்தை ஒப்புக்கொண்டபோதே உணர்ந்தேன். இருந்தாலும் என்னால் முடிந்தவரை செய்துள்ளேன். இது நகைச்சுவைப் படமாக இருந்தாலும் எனது நடிப்புத் திறமைக்கும் நல்ல வாய்ப்புகள் கிடைத்தன என்றார் ஐஸ்வர்யா ராய்.

# கவர்ச்சிப் புரட்சியில் அசின்



அசின்

இந்தி வாய்ப்புகளைத் தக்க வைத்துக்கொள்ள அதிரடி கவர்ச்சிப் புரட்சியில் இறங்கியுள்ளாராம் அசின். இதன் முதற்கட்டமாக சல்மான்கானுடன் ரெடி படத்தில் படுக்கையறை மற்றும் நெருக்கமான காதல் காட்சிகளில் நடித்துள்ளாராம். படம் வெளியாவதற்கு முன்பு இந்தக் காட்சிகளை வெளியிட்டு புதிய வாய்ப்புகளைப் பிடிக்க அவர் திட்டமிட்டுள்ளதாக மும்பை பத்திரிகைகள் கிசுகிசுக்கின்றன. வாய்ப்புக் குறைந்தால் அல்லது இல்லாமல் போனால் கவர்ச்சி ஆயுதத்தை முழுசாகப் பிரயோகிப்பது நடிகைகள் வழக்கம். அசினும் இதற்கு விலக்கில்லை. கஜினி மூலம் இந்திக்குப் போன முதல் படத்திலேயே இந்தி ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். அதன் பிறகு லண்டன் டிரீம்ஸ் படத்தில் சல்மான்கானுடன் ஜோடி சேர்ந்தார். அது படுதோல்வியடைந்தது. இதனால் பட வாய்ப்புகள் குறைந்தது. ஆரம்பத்தில் கஜினி வெற்றி தந்த மிதப்பில் கவர்ச்சியாக நடிக்கமாட்டேன் என்று தயாரிப்பாளர்களிடம் ஏற்கனவே நிபந்தனை போட்டிருந்தார். ஆனால், இந்த நிபந்தனைக்கு இப்போது வேலையில்லாமல் போய்விட்டது. இந்தி கதாநாயகிகள் அனைவரும் நீச்சல் உடை வரை தாராள கவர்ச்சி காட்டுவதால் வாய்ப்புகளைத் தக்கவைக்க அசினும் தற்போது பிடிவாதத்தை தளர்த்தியுள்ளார்.

சல்மன் கானுடன் தற்போது நடித்து வரும் ரெடி படத்தில் தாராளமாக கவர்ச்சி காட்டியுள்ளாராம். நெருக்கமாக படுக்கையறைக் காட்சிகளிலும் முத்தக் காட்சிகளிலும் நடித்துள்ளாராம். விரைவில் இந்தக் காட்சிகள் தொடர்பான படங்களை வெளியிட உள்ளாராம் அசின். இதன் பிறகு இந்தியில் தனது நிலையே வேறு என்றும் அவர் கூறி வருகிறாராம்.



நடிகர் ஆர்.கே.வுக்கு மற்றுமொரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எல்லாம் அவன் செயல், அழகர் மலை போன்ற படங்களில் நடித்தவர் ஆர்.கே.தற்போது அவர் பி. வாசுவின் இயக்கத்தின் புலிவேஷம் படத்தில் நடித்து வருகிறார். இதுபோக, ஏசி ஆனந்தனின் ஆப்பிள் புரொடக்சனில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு படத்தில் நடிக்கை ஒப்பந்தமாகியுள்ளார். பி.வாசுவின் இயக்கத்தில் ரவுடியாக நடிக்கும் ஆர்.கே.நாஜி கைலாஜின் படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார்.

Saturday

மத்திய அமைச்சரானாலும் ஆனார் நெப்போலியன் சினிமாவுக்கே குட்பை சொல்லியிருந்தார். நீண்ட இடைவேளைக்குப் பின் தற்போது ஒரு படத்தில் நடிக்கச் சம்மதித்திருக்கிறா
நெப்போலியன். சினிம
வேலைகள் தன் அமை
பதவி ஆற்ற வேண்டிய
களைப் பாதிக்கக்கூட
என்ற அக்கறைதான்
வாய்ப்புகளைத் தவிர்ப்
தற்குக் காரணமாம். பு

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Saturday சினிமா




அமைச்
ஆனார்
யன்
கே
ால்லி
நீண்ட
ளைக்குப்
து ஒரு
டிக்
த்திருக்கிறார்
யன். சினிமா
தன் அமைச்சர்
வேண்டிய பணி
திக்கக்கூடாது
ளைதான் அவர்
ளத் தவிர்ப்ப
ணமாம். புது

முகங்கள் நடிக்கும் பள்ளி கொண்டபுரம் என்னும் படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து மேலும் சில இயக்குநர்கள் படத்தில் நெப்போலியனை நடிக்க கேட்டு அணுகியிருக்கின்றனர்.

## கமலின் அடுத்த படம் 'தலைவன் இருக்கின்றான்'

தனது அடுத்த படம் தலைவன் இருக்கிறான் என்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார் கமல்ஹாசன். கமல் இப்போது மன்மதன் அம்பு படத்தில் நடித்துள்ளார். இந்தப்படம் அடுத்த மாதம் திரைக்கு வருகிறது. இந்த நிலையில் தனது அடுத்த படம் தலைவன் இருக்கின்றான் என அறிவித்துள்ளார் கமல்ஹாசன். இந்தப் படத்தை தானே இயக்கலாம் அல்லது தனக்கு நெருக்கமான இயக்குநர் இயக்கவும் வாய்ப்புள்ளது என அவர் அறிவித்துள்ளார். இது தொடர்பாக பிரபல மலையாள நாளிதழுக்கு கமல் அளித்துள்ள பேட்டியில்; இப்போது எனது அடுத்த படத்தின் ஸ்கிரிப்ட் வேலைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இந்தப் படத்துக்குத் தலைவன் இருக்கின்றான் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. முதலில் தலைவன் இருக்கிறான் என்றுதான் வைத்தேன். இலக்கணப்படி தலைவன் இருக்கின்றான் என்பதுதான் சரியானது. இதுவொரு பெரிய பட்ஜெட் படம். சர்வதேச சமுகத்தைப் பற்றியதான இந்தப் படம் தான் இப்போது என் மனதை ஆக்கிரமித்துள்ளது. ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கிறது ஹொலிவூட் ஸ்ரூடியோ ஒன்றும் இணைந்து தயாரிக்கிறது என்று கூறியுள்ளார். அநேகமாக வோல்ட் டிஸ்னி நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்க உதவும் எனத் தெரிகிறது.




## றும் துறந்த வித்யாபாலன்



எப்.எச்.எம். என்ற இதழுக்காக பிளவுஸைத் துறந்து முழு முதுகையும் காட்டியபடி அரைநிர்வாண போஸ் கொடுத்துள்ளார் நடிகை வித்யாபாலன். முதுகு தெரிய வித்யா பாலன் கவர்ச்சி போஸ் கொடுப்பது இது முதல் முறையல்ல. இதற்கு முன்பும் கூடக் கொடுத்துள்ளார். ஆனால், இப்போதுதான் முதன்முறையாக பிளவுஸையும் துறந்து முழு முதுகும் தெரியும்படி போஸ் கொடுத்துள்ளார் அவர்.

எப்.எச்.எம்.இதழின் அட்டைப் படத்திற்காகத்தான் இந்தக் கவர்ச்சிகரமான போஸ் வெறும் சேலையொன்றை முன்பக்கமாகச் சுற்றிக்கொண்டு பிளவுஸ் இல்லாமல் முழு முதுகும் தெரியும்படி வித்யா பாலன் கொடுத்துள்ள இந்தப் போஸ் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

எப்.எச்.எம். இதழின் 3 ஆவது ஆண்டையொட்டி இந்த ஸ்பெஷல் தரிசனம் கொடுத்துள்ளார் வித்யா. இந்த மாதம் இந்தக் கவர்ச்சி இதழ் விற்பனைக்கு வருகிறது. விரைவில் மறைந்த கவர்ச்சிக் கன்னி சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் நடிக்கவுள்ளார் வித்யா பாலன். இப்படத்தில் வரலாறு காணாத அளவுக்கு கவர்ச்சியைக் கொடுக்க அவர் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.



எதற்கும் பாதுகாப்பாய் இருக்கட்டுமே என்று நினைத்தாரோ என்னவோ திடீரென தயாரிப்புத் துறையில் இறங்கியிருக்கிறார் விஷால். வழக்கமாய் அவரது அண்ணன் விக்ரம் கிருஷ்ணா படங்கள் தயாரிக்க நடிக்க மட்டுமே செய்து வந்த விஷால் திடீரென ரு லவ் த்ரில்லர் படமொன்றைத் தயாரிக்கும் முடிவுக்கு வந்துள்ளார். தமிழ், தெலுங்கு என இருமொழிகளில் உருவாகும் இப்படத்தின் நாயகன் விஷால் இல்லை. நகுலன் மற்றும் மனோஜ் நாயகனாக நடிக்கும் இப்படத்தை விஷாலை வைத்துத் தீராத விளையாட்டுப் பிள்ளை படத்தை இயக்கிய திரு இயக்குகிறார்.




விருதகிரி – விஜயகாந்த், மீனாக்ஷி





எத்தனையோ புதுமுகங்கள் அறிமுகமானாலும் அத்தனை பேருக்கும் முதல் படம் வெற்றிப் படமாக அமைவதில்லை. அத்தனை பேருக்கும் முதல் படம் பேர் சொல்லும் படமாக அமைவதில்லை. அடுத்தடுத்த படத்துக்கு வாய்ப்பு அமைவதில்லை. இந்த மூன்றுமே விமலுக்கு அமைந்திருக்கிறதென்றால் அவர் பெரிய எத்தனாகத் தான் இருக்க வேண்டும். அதை நிரூபிப்பதுபோல் விமல் எத்தன் படத்தில் நாயகனாக நடித்து வருகிறார். இப்படத்தை ஷெரால் பிலிம்ஸ் நஸீர் தயாரிக்கிறார். எல்.சுரேஷ் இயக்குகிறார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# சிரிக்க... சிந்திக்க....!!











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# எமிலியோ எடுஆர்டோ மெசேரா

உலகில் தற்பொழுதுள்ள முன்னாள் இராணுவ ஆட்சியாளர்களில் ஒருவரான ஆர்ஜென்டீனாவின் எமிலியோ எடுஆர்டோ மெசேரா கடந்த எட்டாம் திகதி மரணமடைந்துள்ளார்.

இராணுவத்தில் உயர் பதவிகளில் வகித்துவந்தவர்கள் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சி நடத்துபவர்கள் தான் இந்த இராணுவ ஆட்சியாளர்கள் அல்லது சர்வாதிகாரிகள் என அழைக்கப்படுகின்றனர்.

இராணுவ அல்லது சர்வாதிகார ஆட்சி நடைபெற்ற நாடுகளில் ஆர்ஜென்ரீனாவும் ஒன்று.

ஆர்ஜென்ரீனாவின் தேசிய மீளமைப்பு நடவடிக்கைகளின் போது ஜனாதிபதியாக இருந்த இஸபெல் மார்டினெற் டீ பெரனை ஜோர்ஜ் ரபேல் விடெலா மற்றும் ஒல்லன்டோ ரமொன் அகொஸ்தி ஆகியோரின் துணையுடன் பதவிநீக்கி ஆட்சியை கைப்பற்றியவர்தான் மெசேரா.

ஆர்ஜென்ரீனாவின் என்ரே ரயஸ் பகுதியின் பரண பகுதியில் 1925 ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி பிறந்தவர் தான் எமிலியோ எடுஆர்டோமெசேரா.

தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து 1942 ஆம் ஆண்டு கடற்படை கல்லூரியில் இணைந்த மெசேரா, 1946 இல் நடுத்தர கடற்படை அதிகாரியாக பணியாற்றினார்.

1955 இல் லிபேரேர்டோரா புரட்சியின் பின்னர் கடற்படையின் தகவல் பிரிவில் பணிபுரிந்துள்ளார்.

பின்னர் பயிற்சி கப்பலின் கப்டன் வரையான பல உயர்பதவிகளை வகித்த மசேரா 1974 இல் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டு ஆர்ஜென்ரீனா கடற்படை தளபதியானார்.

அன்றைய அரசு பல கடற்படை சிரேஷ்ட அட்மிரல்களை பலவந்தமாக பதவி நீக்கிய பின்னரே மசேரா கடற்படை தளபதியானார்.

இதன்பின்னரே 1976 முதல் 1978 வரையான காலப்பகுதியில் இராணுவ ஆட்சி நடைபெற்று அக்காலப்பகுதியில் பலர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மெசேரா காலத்தில் படுகொலை செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல் கைதிகளின் குழந்தைகளை திருடி விற்றமை குறித்தும் மசேராமீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் 1981 ஆம் ஆண்டு தனது பதவிகளை துறந்த மசேரா ரோமானியாவின் புச்சாரெஸ்ற்றிற்கு பயணித்தார்.

பின்னர் 1983 இல் மனித உரிமைமீறல் குற்றச் சாட்டுக்களுக்காக விசாரிக்கப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டதுடன் இராணுவப் பதக்கங்களும் பதவிநிலைகளும் மெசேராவிடமிருந்து மீளப்பெறப்பட்டன.

இருந்தாலும் 1990 இல் ஜனாதிபதியாக இருந்த கார்லஸ் மெனமால் மெசேராவிற்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

அதனை அடுத்து மீண்டும் 1998 இல் சித்திரவதை, ஆட்கடத்தல் படுகொலை குற்றச்சாட்டுகளின் பேரில் மீண்டும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு முதல் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட மெசேராவிற்கு இராணுவ மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் அவரது வழக்கு நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 8 ஆம் திகதி தனது 85 ஆவது வயதில் காலமானார்.

இராணுவ ஆட்சியாளரான மெசேராவுக்கு நிகழ்ந்த சம்பவங்களை ஏனைய இராணுவ ஆட்சியாளர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மெசேராவை உதாரணமாகக் கொண்டு ஏனைய இராணுவ மற்றும் சர்வாதிகார ஆட்சியாளர்கள் தமது எதிர்காலத்தினை கற்பனை செய்து பார்க்கவேண்டும்.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலகில் வேகமானவை

உலகின் அதிவேகமான காராக அமெரிக்க கார் கம்பனி ஒன்றினால் தயாரிக்கப்பட்ட ஷெல்பி சுப்பர் கார் *(Shelby Super car)* உள்ளது. இது மணித்தியாலத்திற்கு 413 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது. ஒரு ஜெட் விமானத்தில் வேகத்தில் செல்லக்கூடிய இந்த காரின் பாகங்கள் பாரமற்ற டைட்டானியம் மற்றும் கார்பன் பைபர் இழைகளினால் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் நவீன குளிரூட்டி வசதிகள், கமெரா, டிவிடி பிளேயர் மற்றும் ஜி.பி.எஸ்.கட்டுப்பாட்டு திரை என்பனவும் அடக்கப்பட்டுள்ளன.

நாசாவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த விமானம் உலகின் அதிவேக விமானமாக தற்போது உள்ளது. மணிக்கு 12,144 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடிய இந்த விமானம் ஒலியின் வேகத்தைவிட 10 மடங்கு வேகத்தில் செல்லக்கூடியது. தற்போது இந்த விமானத்தை விண்வெளி பயணங்களுக்குப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதோடு இதை ஆட்கள் இல்லாமல் இயங்கச்செய்வது தொடர்பிலும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.





ஷங்காய் நகரில் மின்சாரத்தில் ஓடும் இந்த ரயில் தான் உலகிலேயே அதிக வேகமாக செல்லக் கூடிய ரயிலாகும். இதன் வேகம் மணிக்கு 550 கிலோ மீற்றர் ஆகும். இது ஷங்காய் நகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள புடொங் சர்வதேச விமான நிலையத்துக்கு 7 நிமிடங்களில் செல்லக்கூடியது. பயணிக்கத் தொடங்கிய 2 நிமிடங்களிலேயே 350 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய இந்த ரயில் மிகச் சிறிய நேர இடைவெளியிலேயே தனது முழு வேகத்தையும் அடையக்கூடியது.







உலகிலேயே அதிவேகமாக செல்லக்கூடிய மோட்டார் சைக்கிளை அமெரிக்க மோட்டார் நிறுவனமொன்று தயாரித்துள்ளது. மணிக்கு 480 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய இந்த மோட்டார் சைக்கிளை மேலும் பல வசதிகளைக் கொண்டதாகத் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயினை நோக்கி ஒரு விண்வெளி விமானம்

சிவப்புக் கிரகத்தை நோக்கி மனிதக் குடியேற்றவாசிகளுடன் ஒரு வழிப் பயணமாக பறக்கப் போகின்றது நாசாவின் விண்கலம். 2030 இற்குள் அந்த சிவப்புக் கிரகத்தில் முதலாவது மனிதக் குடியேற்றம் தொடங்கப்பட்டுவிடும். அங்கு செல்லப்போகும் குடியேற்றவாசிகள் எப்போதுமே பூமிக்கு திரும்பி வரவே மாட்டார்கள். அன்று பூமியில் கண்டங்களை நாடுகளை தேடித் தேடி அவற்றை மனித சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தான் மனிதன். கொலம்பஸ் *(Colombus)* கால்வைத்த பின்னர்தான் அமெரிக்காவும் அமுண்ட்ஸென் *(Roald Amundesen)* சென்றடைந்த எல்லைதான் தென் துருவ முனையாகவும் போபிஸேர் *(Frobisher)* இனால் *North-west Passage* இன்னூடாக கரை தட்டிய தீவுகள்தான் கனடாவின் மேலுள்ள குட்டித் தீவுகளாகவும் இந்த உலகிற்கு அறிமுகமாயின.



அவர்களின் அசாத்திய துணிச்சல்தான் மனிதனிடத்தில் புதுப்புது தேசங்களைக் கொண்டு வந்து சேர்த்தது. அவர்களைப் போல அசாத்திய துணிச்சலும் தியாகமும் நிறைந்த நான்கு விண்வெளி வீரர்களை செவ்வாயில் தரையிறக்கி அங்கே மனிதக் குடியேற்றத்தின் முதலாவது படியினை அடையப் போகின்றது நாசா. அவர்களுக்கு பூமியில் இருந்து உணவு போன்ற அத்தியாவசியமான தேவைகள் சிறிது காலத்திற்கு அனுப்பி வைக்கப்படும். ஆனாலும் அவர்கள் செவ்வாயில் அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தவரை முயற்சிக்க வேண்டும். அதன் பிறகு மனிதக் குடியேற்றம் அங்கு நடைபெறத் தொடங்கும்.

*Hundred Year Starship* என்றும் இந்த ஒருவழிப் பயணத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 10 பில்லியன் அமெரிக்கன் டொலருக்கு மேல் செலவாகும். இதனால்தான் இந்தப் பயணம் ஒருவழிப்பயணமாக மட்டும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இறுதியாக 2007 ஆகஸ்ட் மாதத்தில் செவ்வாய் கிரகத்தினை நோக்கி ஏவப்பட்ட நாசாவின் *Phoenix lander 2008* இல் செவ்வாயின் வட துருவத்தில் தரையிறங்கியிருந்தது. செவ்வாயின் ஒழுக்கிற்கும் பூமியின் ஒழுக்கிற்கும் இடைப்பட்ட தூரம் 34 மில்லியனில் இருந்து 250 மில்லியன் மைல்களுக்கு இடைப்பட்டதாக இருக்கின்றது. இதனால் விண்வெளி விமானங்களின் பயண நேரம் மாதக்கணக்காக நீள்கின்றது. இதன் காரணமாக இந்த குடியேற்றத் திட்டத்திற்கு அணுக் கருச் சக்தியினை எரிபொருளாகப் பயன்படுத்தி பயணக்காலத்தினை நான்கு மாதங்களாக குறைக்கத் திட்டமிடப்படுகின்றது.

சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்களில் சிவப்புக் கிரகமே பூமியினை ஒத்த உயிர் வாழ்க்கைக்குத் தேவையான காரணிகளை கொண்டிருக்கின்றது. அங்கு துருவப் பிரதேசங்களில் உறைநிலையில் காணப்படும் பனிக்கட்டிகள் உயிரின வாழ்க்கைக்கு ஏதுவாக இருக்கும். மேலும் செவ்வாயில் நிலவும் காலநிலையும் பூமியில் நிலவும் காலநிலையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானதாக இருக்கின்றது. ஆனால் செவ்வாயில் வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட்டின் செறிவு மிக அதிகம். எனவே அங்கு செல்லும் மனிதர்களுக்கு ஒட்சிசன் கவசங்கள் இன்றியமையாததாகும். மனிதனின் காலடி இதுவரை பதியாத தடங்களை நோக்கிய இத்தகைய மனிதனின் பயணங்கள், புதுப்புதுக் கிரகங்களுக்கு மனிதனை ஏற்றுமதி செய்யும் திறனை வழங்கப்போகின்றது.


இவ்வாறு செல்பவர்கள் அங்கே தமது காலனிகளை உருவாக்கி தாமாக வாழத் தொடங்கி விடுவார்கள். அங்கே மனித இராட்சியம் நிறுவப்படும். சொல்லப்போனால் பூமியில் கருவுற்ற மனிதன் தன் சிறகுகளை மெல்ல விரித்து பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கப் போகின்றான்.

# பூமியின் மையப்பகுதி குறித்த ஆய்வு ஆரம்பம் புதிர்களைக் கண்டறிய விஞ்ஞானிகள் ஆர்வம்

பூமியின் மேல் அடுக்கில் உள்ளவற்றை ஆய்வு செய்து பல்வேறு தகவல்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் பூமியின் பல ஆயிரம் கி.மீ. ஆழத்தில் உள்ள மையப்பகுதி குறித்த ஆய்வுகள் மிகக்குறைந்த அளவே நடந்துள்ளன. இதுகுறித்து கண்டுபிடித்தால் பூமி தோன்றிய விதம் பற்றி புதிய தகவல்களை அறிய முடியும். எனவே பூமியின் மையப்பகுதியை அறிந்துகொள்ள விஞ்ஞானிகள் வெகுவாக முயற்சித்து வருகின்றனர்.

பூமியின் மேற்பரப்பில் சில அடி ஆழம் வரை மணல் பரவியுள்ளது. அதற்குக் கீழே பாறை அடுக்குகள் காணப்படுகின்றன. அவற்றிற்கு இடையே பூமியில் இறங்கும் மழை நீர் சேகரமாகிறது. அதையடுத்து கடினமான பாறை அடுக்குகள் பல ஆயிரம் கி.மீ. ஆழத்திற்கு உள்ளன. அதற்கும் கீழே சூடான நிலையில் பாறைகளும் உலோகங்களும் கொண்ட எடை அதிகமுள்ள மையப்பகுதி அமைந்துள்ளது. இங்கிலாந்து நாட்டு பிரிஸ்டோல் பல்கலைக்கழகத்தில் பூமியின் மையப்பகுதியை அறிந்துகொள்ள ஆய்வு நடந்து வருகிறது. நில நடுக்கத்தை தெரிந்துகொள்ள 'ஸ்பீட் கன்' உதவுகிறது. அதே தொழில்நுட்பத்தை மேம்படுத்தி பூமியின் உட்பகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதில் பல ஆயிரம் கி.மீ. மிக ஆழத்தில் உள்ள பூமி மையத்தின் வெளிப்பகுதி மெதுவாக சுற்றி வருகிறது என்று தெரியவந்துள்ளது.

பூமியின் மேல் அடுக்கில் அமைந்துள்ள கண்டங்கள், கடல்கள், கண்டத் திட்டுக்கள் ஆகியவை மையப்பகுதியின் மேல் அடுக்குகளாக அமைந்துள்ளன. மெதுவாக சுற்றி வரும் மையத்தின் வெளிப்பகுதியில் மாற்றம் ஏற்படும்போது கண்டத் திட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி நிலநடுக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2,900 கி.மீ. ஆழத்தில் பாறைகள் திட நிலையில் மிக சூடாக காணப்படுகின்றன. அடுப்பு மீது பாத்திரத்தில் வைக்கப்படும் நீர் சூடாகும்போது எவ்வாறு மெதுவாக சுற்றுமோ அதேபோல் இப்பாறைகளும் மெதுவாக சுற்றி வரு




கின்றன. பூமியின் மேல் அடுக்கில் நிகழும் மாற்றங்களை அறிந்து கொண்ட அளவில் அதன் மையப்பகுதியில் என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது புவியியலாளர்களால் அறிந்துகொள்ள முடியாத புதிராக உள்ளது.

'பூமியின் பல ஆயிரம் கி.மீ. ஆழத்தில் ஏற்படும் மாற்றங்களை மனிதர்கள் சென்று அறிந்து கொள்ள முடியாது. பூமியின் உள்ளே செல்லச் செல்ல வெப்பநிலை மிக அதிகமாக இருப்பதே இதற்கு காரணம். எனவே பூமியின் மையப்பகுதியில் ஏற்படும் மாற்றங்களை நிலநடுக்க அலைகள் மூலமே தெரிந்து கொள்ள முடியும்' என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். 'பூமியில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்படும்போது அதன் அலைகள் பூமியை ஊடுருவி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அந்த அலைகளை ஆய்வு செய்வதன் மூலம் ஆயிரக்கணக்கான கி.மீ. ஆழத்தில் ஏற்படும் விளைவுகளை விஞ்ஞானிகள் தெரிந்து கொள்கின்றனர். பூமியின் 7000 கி.மீ. ஆழத்தில் அதன் மையப்பகுதி இரும்பு கோளகமாக அமைந்துள்ளது. புதிர் நிறைந்த இப்பகுதியை நிலநடுக்க அலைகள் மூலம் அளவீடு செய்கிறோம்' என்கிறார் பிரிஸ்டோல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆண்டி நேவக்கி.

'பூமியின் மையப்பகுதி புதிராக உள்ளது. ஒரு பாத்திரத்தில் தயிரை வைத்து கடையும்போது பாத்திரத்தின் வெளிப்பகுதியில் வெண்ணை திரள்கிறது. அதேபோல் மிக பிரமாண்டமான பூமியின் மையப்பகுதி சுற்றி வருகிறது. பூமி மையத்தின் உட்பகுதி வேகமாக சுழலும்போது மின்காந்த புலம் ஏற்பட்டு சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களில் இருந்து மனிதர்களை பாதுகாக்கிறது. மையத்தின் வெளிப்பகுதி மெதுவாக சுழன்று வருகிறது. இந்த இயக்கம் காரணமாக பூமியின் மேல் அடுக்கில் உள்ள கண்டத் திட்டுக்கலை நகர்வது, நிலநடுக்கம் ஏற்படுவது, மலைகள் தோன்றுவது, எரிமலைகள் வெடிப்பது போன்றவை நிகழ்கின்றன. மெதுவாக சுற்றி வரும் மையத்தின் வெளிப்பகுதியை மதிப்பிடுவதன் மூலம் பூமி தோன்றிய பரிணாமத்தை அறிந்து கொள்ளமுடியும் என்று கருதப்படுகிறது' என்கிறார் பேராசிரியர் மைக் கெண்டல்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# மின்காந்த அலைகள் மூலம் மூளையைத் தூண்டுதல்

மின்காந்த அலைகளைக்கொண்டு மூளையின் செயல்பாட்டை சீராக்க முடியும் என்பது மருத்துவ ஆராய்ச்சியின் சமீபத்திய கண்டுபிடிப்பு. மனிதர்களின் அனைத்து செயல்களையும் நிர்ணயம் செய்வது மூளைதான். அதுதான் நமக்கு எஜமான்.

மூளையின் கட்டளைக்கு ஏற்பதான் உடலின் எல்லா உறுப்புகளும் இயங்குகின்றன. மூளையில் இரத்த ஓட்டம் சீராக இல்லாதபோது பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறன. இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர் குழுவினர் சோகன் கந்தோஷ் தலைமையில் மூளையின் செயல்பாடு மற்றும் குறைபாடுகளை களைவது குறித்த ஆராய்ச்சியில் இறங்கினர்.

மூளையின் குறிப்பிட்ட பகுதியை குறைந்த அழுத்தம் உள்ள மின்சக்தியால் தூண்டுவதன் மூலம் அவர்களை கணக்கில் புலிகளாக்கலாம் என்பதை கண்டுபிடித்துள்ளனர். ஆய்வு முடிவில் கிடைத்த தகவல்கள் மூளையின் குறிப்பிட்ட பகுதியை குறைந்த அழுத்தம் உள்ள மின்சக்தியால் தூண்டுவதன் மூலம் அவர்களுக்கு கணக்கு பார்முலாக்கள் அத்துப்படியாகும்.

கணக்கில் திறமைசாலியாக வரமுடியும். இத்தகைய சிகிச்சை முறையால் டிஸ்கேல்குலியா அல்லது எண் பார்வை குறைபாட்டை சரிசெய்யமுடியும். ஆனால், சரியான முறையில் சிகிச்சை அளிக்காவிட்டால் எதிர்மறை விளைவுகள் ஏற்படும் ஆபத்துகளும் அதிகம் இருக்கிறது. மூளையின் பிற குறைபாடுகளை களைய மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் இடையே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# தங்கச் சங்கிலி

**எஸ்.ஏ.பிச்சை**



வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார் மரியராஜ்.

மகள் ரெஜினா அருகில் வந்து உட்கார்ந்தாள்.

'அப்பா...'

'என்னம்மா...'

'திருவிழாவிற்கு இன்னும் இரண்டு வாரம் தான் இருக்கு...'

'ஆமாம்...'

'நித்யா வீட்டுல எல்லாம் உடுப்பு எடுத்திட்டு வந்திட்டாங்க அப்பா...'

மகளின் எண்ணம் அவருக்கு புரிந்தது.

'நாம் எப்போ உடுப்பு எடுக்கப் போறோம்?'

'அது ஒண்ணுதான் குறை...' அடுக்களையில் இருந்து அம்மா மரியம்மாள் தேநீரை ஆற்றிக்கொண்டு வந்தாள். 'போம்மா... நான் அப்பாவிடம் கேட்கிறேன்...'

'திங்கிற சோத்துக்கே வழியில்லை... உங்களுக்கு உடுப்பு கேட்குதாக்கும்... இந்தாங்க இந்த தேநீரை குடித்திட்டு... சீக்கிரம் தோட்டத்துக்கு போங்க...'

ரெஜினாவின் இளந்தளிர் முகம் வாடியது.

மகளின் வாடிய முகத்தைப் பார்த்தும் மனம் நொந்தார் மரியராஜ். மகளின் தலையைக் கோதி விட்டுக்கொண்டே, 'நாமும் உடுப்பு எடுக்கலாம்மா... வாழைக்காய் வியாபாரி தங்கராஜ் கிட்ட பணம் கேட்டிருக்கேன்... கிடைச்சதும் போகலாம்...' என்றார்.

'தங்கராஜ் அண்ணன் வெளியூர் போய் பத்து நாளாவுது...' என்ற மரியம்மாள், 'என்னங்க... உங்க பால்ய நண்பர்... தேவயிரக்கம் ரொம்ப வசதியா... பெரிய கம்பெனியெல்லாம் வெளியூர்ல வைச்சிருக்கிறாராமே...?'

'அதுக்கு இப்போ... என்ன?'

'அவர் ஊருக்கு வந்திருக்காராம்... அவர் கிட்ட கடனா கொஞ்சம் பணம் கேட்டுப் பாருங்களேன்...'

'கடனா... எதுக்கு?'

'எதுக்கா... உங்க பொண்ணு கழுத்துல... காதுல... ஒரு பொட்டுத் தங்கம் இருக்குதா என்ன? அவர்கிட்ட கடன் வாங்கினா இரண்டு பவுனை ஒரு தங்கச்சங்கிலி வாங்கலாமுல்ல...'

'பிறகு கடனை... எப்படி அடைப்பே...'

'மாசாமாசம்... இரண்டாயிரம் கொடுத்துடுவோம்...'

'பத்து வருசத்துக்கு முன்னால நடந்ததை நினைச்சுப் பார்த்தியா... அவன எப்படி அவமானப் படுத்தினே... அவன் கிட்ட எந்த மூஞ்சியை வைச்சிக்கிட்டு கடன் கேட்கிறது?'

'நான் அப்படி என்ன அவமானப்படுத்திட்டேன்... என் இரண்டு பவுண் தங்கச் சங்கிலி காணாம போயிடுச்சு... உங்க நண்பர்தான் உங்களைத் தேடி வந்திட்டு போனார் என்றேன்...'

'இதை அவன் முன்னாலேயே... சொல்லி அவன அவமானப்படுத்தினே... அந்த தங்கச்சங்கிலியை அவனா எடுத்தான்?'

'யார் எடுத்தாங்கன்னு தெரியாவிட்டாலும் என் தங்கச்சங்கிலி காணாம போனது உண்மை தானே... அந்த சங்கிலி மட்டும் இப்போது இருந்திச்சுன்னா... எம் மகள் கழுத்து இப்படி சும்மா இருக்குமா?' என்றாள், ஆதங்கமாய்.

கார் சத்தம் வாசலில் கேட்டது.

'இந்த பாருங்க... உங்க சிநேகிதர் தான் வாரார்... சமயம் பார்த்து பேசுங்க...' என்றவாறு அடுக்களைக்குள் சென்றாள்.

'டேய்... மரியராஜ் எப்படிடா... இருக்கே...' வீட்டுக்குள் நுழைந்தார். தேவயிரக்கம்.

'டேய்... வாடா... எப்போ வந்தே? நல்லாயிருக்கிறியா...' மரியராஜுக்கும் நண்பனை எதிர்பாராமல் பார்க்க முடிந்த மகிழ்ச்சி.

'நல்லா இருக்கேன்டா...' இருவரும் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள்.

'அதுசரி... இது யாரு உன் மகளா?'

'ஆமாப்பா...?'

'ஏம்மா... இப்படி வா. உன் பேரென்னம்மா...?'

'ரெஜினா...'

'எதுவரை படிச்சிருக்கே?'

'பத்து...'

'அதுக்குப்புறம் படிக்கலையா...?' அப்பாவை பார்த்தாள்.

'சரி... அடுத்த வருஷம் நீ மேற்கொண்டு படிக்கிறே... நீ என்ன படிச்சாலும் என் செலவு தான்... அது மட்டுமல்ல... உன் கல்யாண செலவும் இந்த சித்தப்பாவோடது தான்...' என்றார் தேவயிரக்கம்.

தேனாக பாய்ந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே மரியம்மாள் தேநீர் கொண்டுவந்தாள்.

'வாங்கண்ணே... நல்லாயிருக்கீங்களா? இந்தாங்க தேத்தண்ணி'

'நல்லா இருக்கேம்மா...' தேநீரை வாங்கிப் பருகினார்.

பையை திறந்து ஒரு இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை எடுத்து ரெஜினாவிடம் நீட்டினார்.

'இந்தாம்மா... இதை போட்டுக்கோ...'

அவள் திரும்பி அப்பாவை பார்த்தாள்.

'ஏண்டா... இதெல்லாம்...' என்று இழுத்தார் மரியராஜ்.

'நீ சும்மா... இருடா...' என்றவர், ரெஜினா பக்கம் திரும்பி, 'சித்தப்பா தாரேன் வாங்கிக்கோம்மா...'

தயங்கி... தயங்கி... வாங்கினாள் ரெஜினா.

பர்ஸை திறந்து பத்தாயிரம் ரூபாவை எடுத்து ரெஜினாவிடம் நீட்டினார்.

'நகருக்கு போய்... திருவிழாவுக்கு உடுப்பு எடுத்துக்கோ... இனி என்ன செலவுன்னாலும் சித்தப்பாவைத்தான் கேட்கணும்... தெரிஞ்சுதா...'

'சரி'ன்னு திகைப்பு மாறாமல் தலையாட்டினாள்.

'சரி... நான் போயிட்டு அப்புறம் வாரேன்...'

தேவயிரக்கத்தை கார் வரை வழியனுப்ப போனார் மரியராஜ்.

'இந்த மனுஷனைப் போய் நான் சந்தேகப்பட்டேன்... என்ன செருப்பாலத்தான் அடிக்கனும்' என்று முணுமுணுத்துக் கொண்டே மரியம்மாள் தன் தலையிலே குட்டிக்கொண்டாள்.

பத்து வருஷத்துக்கு முன்னால் எடுத்த இரண்டு பவுண் செயினுக்கு தான் தேவயிரக்கம் பரிகாரம் தேடிக்கொண்டிருக்கிறார் என்பது அவர் மனச்சாட்சிக்கு மட்டுமே தெரிந்த உண்மை.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்களே சொல்லுங்கள்...!

நிகழ்காலம் சாகாமல்
நினைவுகளாய் என்னை
சாகடிக்கின்றன...

தோல்விகளின் சுவடுகள்
தொடர்கதையாய்...
வெற்றியின் இரகசியம்
வேப்பம் கச்சலாய்....

உன்னத அன்பென
உள்ளம் நம்பி...வெம்புகிறது...
பொய்மையின் புலம்பல்களால்
மெய்மைப் பொழுதுகள்
வீணாகியது...நினைக்கையிலேயே...
சேற்றுப் புழுதியாகியது...

சேற்றில் புதைந்த
கால் தடங்கலாய்...
துன்பங்கள் -என் நிழலிலே...

மலர்களே...
அன்பின் மொழியேது...?
இன்பத்தின் வழியேது...?
சொல்லுங்கள்...

மலர்களே ... உங்கள்
மௌனம் கூட....
எனக்கு மரணவலியளிப்பது
ஏனோ...?

**கரவெட்டி.**

## மணமகள் வேண்டுமாம்

நீண்ட கூந்தலாள்
மெல்லிய மேனியாள்
கொடியிடையாள்
சிவப்பு நிறமவளாய்
வேண்டும் என்று
மணமகன் வீட்டினர்
பெண் உருவை சித்திரிக்க

அந்தப் பெண் வீட்டினர்
மணமகனை சந்திக்க
போனபோது
பொழுது சாய்ந்த வேளை
யிலே
பொறுமையோடு மணமக
ளும்
மனமாக வந்து நின்றாள்
மணமகனை காணவில்லை
கருநீல நிறமவனை
'காமாட்சி' மாடென்று
எண்ணி
விடுக்கென்று சென்று விட்
டாள்
விளங்காத மணப்
பொண்ணு

**சுபா,**
**மானிப்பாய்.**








## அன்னை...!

துடித்திடும் கருவுக்காக
துவண்டிடும் மெய்சிலிர்த்து
உதிரத்தை உணவாக்கி
ஊட்டி வளர்த்திடும்
ஊதியம் வாங்காத
உண்மையான உழைப்பாளி அன்னை

**மங்களம் மனோரஞ்சன்,**
**கல்முனை-02.**




நட்பென்ற
தலைப்பில்
அவன் வரைந்த
கவிதைக்கு
முதல் பரிசு!
மனம் மகிழ்ந்த
நண்பன் மனம்
திறந்து வாழ்த்திய
போது...
கேட்டான் அவனிடம்
யார் நீ என்று!

**கே.சம்ஸ் முஹம்மத்,**
**பரகடுவ.**

## பாருங்கள்...

பெரும்போக வயல்களில்
நல்ல அறுவடையாம்
பெற்றோல் விலை
இன்னும் குறையுமாம்
அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்
எனக்கு ஒரே கவலை
ஐந்து மணியாகியும்
அம்மா கொண்டுவராத
சாயங்கவடிய தேனீரைப்பற்றித்தான்

நியாஸ் முஸாதிக்.

## என் நச்சுப்பூவிற்கு...

கல்லூரி காலத்தில் என்
கைகோர்த்து நீ திரிந்த
பசுமை நினைவுகள் என்னை
பரவசப்படுத்தவில்லை...

இன்றென் உயிர்வேர் வரை
நீ விஷம் தடவிப் போன
துரோகத்தனமே-என்
கருவிழிக்குள்
விழி திறக்கி கிடக்கின்றன!

நட்பென்ற நந்தவனத்தில்
நீ மட்டும் நச்சுப்பூவாய்
பூத்தது தெரியாமல்
உன்னிடம் தோற்றுப்போனேனே....

ஆருயிர் நண்பனென
என் ஆவி தொடும் வண்ணம்
நீயழைத்த போதெல்லாம்
உன் போலி வேஷம் தெரியாது
புல்லரித்து நின்றேனே,
இன்று புழுங்கி வேகிறதடா
என்னிதயம்!

ஆழ்ந்த நட்பினால்
உன்னையென் உள்ளத்தில்
இருத்தி ஆராதித்தேனே
உன் நெஞ்சத்தால் எப்படி
என்னை வஞ்சிக்க முடிந்தது?!

என் நட்பின் ஆழத்தை
அறியாதவனே..
இன்றென் நெஞ்சத்தில் நீ
நெருப்பாகவும்
நெருஞ்சி முள்ளாகவும் தான் இருக்
கிறாய்!

ஆதலால்
முள் வேலியிடுகிறேன்
உன் மூச்சுக்காற்றும்
எனக்கு விஷக்காற்றே
மறந்தும் என்
வழியில் வராதே...

**கொக்காகலையூர்**
**கிருஷ்ணசாமி - அருள்.**



## கனவு

உணர்வுகளின் விம்பங்கள்
உருவமில்லாத் திரையில்
உறங்கிக் கொள்கையில்
ஓடிக்கொண்டிருக்கும்

**யாழ். அஞ்சனா,**
**கல்லுவம், கரவெட்டி.**


உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியிடங்களில் பாலியல் தொல்லை



இன்று பெண்கள் பணிபுரியாத துறையே இல்லை என்ற நிலை வந்துவிட்டது. சில இடங்களில் பெரும்பான்மையாக ஆதிக்கம் செலுத்துகிறார்கள் அவர்கள். ஆனாலும் பெரும்பாலான பெண்கள் சொல்லி வைத்ததுபோன்று ஒரே ஒரு தொந்தரவுக்கு தொடர்ந்து உள்ளாகுகிறார்கள். அது தான் பாலியல் தொந்தரவு!

இந்த தொந்தரவுக்கு ஆளாகும் பெண்கள் அழகாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அவளை மட்டம் தட்ட நினைக்கும் அதிகார ஆண்களும் தொந்தரவுக்கு உட்படுத்தி சுகம் காண்கிறார்கள். கூட்டமாகக் கூடிய நின்று குறிப்பிட்ட பெண்ணைத் தவறாக வர்ணித்தல் அவளது கையை பிடித்து இழுத்தல் ஆகிய தொந்தரவுகளும் அதில் அடங்கும்.

மனீஷாவுக்கு (பெயர் மாற்றப்பட்டுள்ளது) 29 வயது பொறியியல் படித்துள்ள இவள் நகரில் உள்ள கம்பனி ஒன்றில் பணிபுரிந்தாள். தகுதி, திறமை, அழகு... என்று எல்லாம் இருந்தும் 5 ஆண்டுகளாக ஒரே பதவியிலேயே இருந்தாள். பதவி உயர்வுக்கான தகுதி பட்டியலில் கூட அவளது பெயர் சேர்க்கப்படவில்லை.

அவள் பணிபுரிந்த நிறுவனத்தில் உயர் பதவிகளில் இருந்த பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. தன்னுடன் படித்து பிற நிறுவனங்களில் சேர்ந்த தனது தோழியர் சிலர், தன்னைவிட உயர்ந்த பதவிக்கு சென்றுவிட்டதால் இவளும் தன் மேல் அதிகாரியிடம் தனது பதவி உயர்வு பற்றிப் பேசினாள். பெரும்பாலும் யாரிடமும் சிரித்துப் பேசாமல் முகத்தை 'உம்' மென்று விறைப்பாக வைத்திருக்கும் அந்த அதிகாரி பதவி உயர்வு வேண்டும் என்று மனீஷா கேட்டதும் முகத்தை திடீர் சந்தோஷத்திற்கு மாற்றினார்.

'உனக்கு இல்லாதா பதவி உயர்வா? விரைவில் ஏற்பாடு செய்கிறேன். நான் எதிர்பார்க்கும் தகுதிகள் உன்னிடம் இருக்க வேண்டும். அந்தத் தகுதி தேர்வில் நீ தேர்ச்சி பெற்று விட்டால் அடுத்த மாதமே இரட்டைப் பதவி உயர்வுக்கு ஏற்பாடு செய்கிறேன்...' என்று வழிந்தார் 50 வயது தாண்டிய அந்த அதிகாரி.

அந்த அதிகாரியின் பதில் மனீஷாவுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. 'பதவி உயர்வு வேண்டும்... என்று இப்போதுதான் கேட்டேன். உடனே இரட்டைப் பதவி உயர்வு தருகிறேன் என்கிறாரே... நாம்தான் தாமதமாகக் கேட்டு இருக்கிறோமோ... எப்போதோ கேட்டிருந்தால், அப்போதே கிடைத்து இருக்குமே...' என்று மனதிற்குள் சிலிர்த்தவாறே அங்கலாய்த்துக் கொண்டு தனது இடத்துக்குத் திரும்பினாள்.

மனீஷா தனது சீற்றில் அமர்ந்த அடுத்த நிமிடமே அவளது விலை உயர்ந்த செல்போன் லேசாக பளிச்சிட்டு அமைதியானது. புதிதாக ஒரு எஸ்.எம்.எஸ்.வந்திருந்தது. அதைத் திறந்து பார்த்தாள்.

சிறிதுநேரத்திற்கு முன்பு எந்த அதிகாரியிடம் தனது பதவி உயர்வு பற்றி பேசிவிட்டு வந்தாளோ, அதே அதிகாரிதான் ஒரு மெசேஜ் அனுப்பி இருந்தார். அதை படித்துப் பார்த்தாள். ஒரு கணவன், தன் மனைவியிடம் உரிமையோடு கேட்பதுபோல் இருந்தது அந்த எஸ்.எம்.எஸ்.அதற்குள் கொஞ்சம் ஆபாசமும் ஒளிந்திருந்தது.

அதைக் கண்டு திடுக்கிட்ட அவள், ஒருவேளை... தனது மனைவிக்கு அனுப்புவதற்குப் பதிலாகத் தனக்கு மாற்றி அனுப்பிவிட்டாரோ... என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்திக்கொண்டாள்.

அன்று மாலையில் தனது ஈ-மெயிலுக்கு புதிதாய் வந்த ஒரு கடிதத்தைத் திறந்து பார்த்தாள். காலையில் தனக்கு எஸ்.எம்.எஸ்.அனுப்பிய அதே அதிகாரிதான் இந்த மெயில் கடிதமும் அனுப்பி இருந்தார். அதில் ஒரு இளம்பெண் ஒரு இளைஞனைக் கட்டிப்பிடித்த நிலையில் முத்தம் கொடுக்கும் படம் இணைக்கப்பட்டு இருந்தது.

'எனக்குப் இந்த படம் பிடித்திருக்கிறது... உனக்குப் பிடித்து இருக்கிறதோ?' என்றும் இணைப்புக் கடிதத்தில் கேட்டிருந்தார்.

அப்போதுதான் மனீஷாவுக்கு உண்மை புரிந்தது. தன்னை அவரது 'ஆசைக்கு' இணங்க வைக்கவே இப்படியெல்லாம் செய்கிறார் என்று புரிந்து கொண்டாள்.

அன்று வீட்டிற்குச் சென்ற அவளுக்குத் தூக்கமே வரவில்லை. திருமணமாகி இருந்தாலாவது அதுபற்றி கணவரிடம் கூறி மேற்கொண்டு என்ன செய்யலாம்? என்று கேட்டிருக்கலாம். திருமணம் ஆகாதவள் என்பதால் பெற்றோரிடம் அது பற்றி சொல்ல முடியாமல் தவித்தாள்.

மறுநாள் அலுவலகம் சென்று சீட்டில் அமர்ந்த உடனேயே அதே அதிகாரியிடம் இருந்து இன்டர்கொமில் அழைப்பு வந்தது. அவரைப் பார்க்கச் சென்றாள். அப்போது ரொம்பவே வழிந்தபடி பேசினார் அந்த அதிகாரி.

'எஸ்.எம்.எஸ்., மெயில் எல்லாம் பார்த்து இருப்பாய் என்று நினைக்கிறேன். இவற்றில் உனக்கு விருப்பம் இருந்தால் அடுத்த மாதமே பதவி உயர்வு தருகிறேன். சம்பளமும் 30 சதவீதம் கூடுதலாகும்' என்றார்.

இதைக் கேட்டு கோபமான மனீஷா 'நான் வேலை பார்க்க வந்தது உங்கள் மனைவியாக அல்ல...' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டாள்.

அடுத்தநாளே மனீஷா மீது பல புகார்கள் கூறப்பட்டன. வேலையை சரிவர செய்வதில்லை. சக ஊழியர்களை மதிப்பதில்லை, அதிக சம்பளம் கேட்டு மிரட்டுகிறார் என்றெல்லாம் கூறி அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கினர்.

வேறு வழி தெரியாத மனீஷா அந்த நிறுவனத்தின் வேலையை உதறிவிட்டு அடுத்த நிறுவனத்திற்கு அதைவிட நல்ல பதவிக்கு அதிகப்படியான சம்பளத்திற்கு சென்றுவிட்டாள்.

மனீஷா மட்டுமல்ல நிறைய பெண்கள் பணிபுரியும் இடத்தில் மேல் அதிகாரிகளால் பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.மேல் அதிகாரிக்கு பணிந்து போகாதபட்சத்தில் பதவி குறைப்பு, பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனவேதனை அளிக்கும் பாலுணர்வு சார்ந்த உடல் நெருக்கம்,நெருங்க முயற்சிப்பது பாலியல் சலுகைகள் காட்டுமாறு ஒரு பெண்ணை வற்புறுத்துவது அல்லது வேண்டுவது பாலியல் தன்மை கொண்ட குறிப்புகளை உணர்த்துதல் அல்லது புகைப்படம் அனுப்புதல் பாலியல் தன்மை கொண்ட எந்த வகையான விரும்பத்தகாத உடல் சார்ந்த வார்த்தைகள் வார்த்தை அல்லாத நடவடிக்கைகளாக இருப்பதே பாலியல் தொந்தரவு என்று நீதிமன்றம் கூறியிருக்கிறது.

இப்படி எந்தவொரு நிலையிலும் ஒரு பெண்ணை தனது ஆசைக்கு உட்பட வைப்பது அல்லது அதற்கு முயற்சிப்பது சட்டப்படி குற்றம்.அதற்கு தக்க தண்டனை வழங்க சட்டத்திலும் இடம் இருக்கிறது.

நீங்களும் பணிபுரியும் பெண்ணா? உங்களுக்கும் பாலியல் தொந்தரவு உள்ளதா? அப்படியானால் உங்களுக்காக சில அறிவுரைகள்;

பதவி உயர்வு, சம்பள உயர்வு உள்ளிட்ட சலுகைகளை ஒரு பெண் எளிதில் பெற வேண்டும் என்றால் அவள் பாலியல் சலுகை காட்ட வேண்டும் என்ற எண்ணம் உயர் அதிகாரிகளாக பணியாற்றும் சில ஆண்களிடம் உள்ளது. நீங்கள் அதுபோன்ற நிறுவனங்களில் பணிபுரிவதை தவிர்க்கவும்.

பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் தொந்தரவு அதிகம் உள்ளது. ஆனால் அது வெளிப்படையாக பதிவு செய்யப்படவில்லை என்கிறார்கள் பெண்கள் அமைப்பினர். அதனால் இந்த பாலியல் தொந்தரவு விடயத்திலும் நீங்கள் விட்டுக்கொடுத்துப்போக முயற்சிக்காதீர்கள்.

நீங்கள் ஆடை அணியும் விடயத்தில் கவனமாக இருங்கள். உங்கள் ஆடை சற்று கவர்ச்சியாக இருந்தாலும் கூட அது உங்கள் சக ஊழியர்களின் மனதை சலனப்படுத்தலாம்.

உங்களை மேல் அதிகாரியோ அல்லது சக ஊழியரோ தவறான நோக்கத்தில் பார்த்தால் அவரை உடனே எச்சரியுங்கள். தொந்தரவுகள் தொடர்ந்தால் வேறு நிறுவனத்திற்கு வேலையை மாற்றிக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் பொலிஸையும் அணுகலாம்.

பாலியல் கொடுமைகள் குறித்த சட்ட அறிவை தெரிந்து வைத்திருப்பதும் அவசியம். உங்களுக்கு அந்த தொந்தரவு வந்தால் அவர்களை எச்சரிக்க இது வசதியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளத்திற்குள் செல்லும் பாகிஸ்தான் கிரிக்கெட்






பாகிஸ்தான் கிரிக்கெட்டை ஏற்கனவே சூதாட்டம் அரக்கன் ஆட்டிப் படைத்து வரும் நிலையில், ஹைதரின் விவகாரம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

டுபாயில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் 4 ஆவது போட்டியில் பாகிஸ்தானின் வெற்றிக்கு ஹைதர் பெரிதும் உதவினார்.

அந்தப் போட்டிக்கு முன் அவரை சூதாட்டக்காரர் ஒருவர் சந்தித்து கடைசி 2 ஒருநாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் தோற்க ஒத்துழைக்க வேண்டும். இல்லையெனில் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதாக ஹைதர் ஜியோ தொலைக்காட்சியில் தெரிவித்துள்ளார்.

அதாவது அவர் விடுதியில் இரவு உணவு எடுக்கச் சென்றபோது ஒருவர் தன்னை அணுகியதாகவும் அவருடன் இரண்டு, மூன்று பேர் இருந்தனர் என்றும் கூறினார் ஹைதர். அவரை தன்னால் அடையாளம் காட்ட முடியுமென்றும் அவர் உருது பேசினார் என்றும் கூறியுள்ள ஹைதர் தங்களுடன் ஒத்துழைத்தால் நிறையப் பணம் பார்க்கலாம் என்றும் இல்லையேல் நிறையப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் அவர்கள் மிரட்டியதாகவும் தனியார் தொலைக்காட்சியொன்றில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அவர் டுபாயிலிருந்து மர்மமான முறையில் வெளியேறி லண்டனில் அடைக்கலம் புகுந்துள்ளார்.

திங்கட்கிழமை காலை லண்டன் வந்து சேர்ந்த ஹைதர் தனக்கு வந்த மிரட்டல் குறித்து பாகிஸ்தானின் ஜியோ ரி.வி.க்குப் பேட்டியளித்துள்ளார். அதில், கிரிக்கெட் சூதாட்டக்காரர்களின் அச்சுறுத்தல் காரணமாகவே தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் பங்கேற்கவில்லை. நான் இங்கிலாந்து அரசிடம் புகலிடம் கோரப்போகிறேன். இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து வருகிறேன்.

போட்டிக்கு முன்னர் என்னை அணுகிய ஒருவர் நான்காவது மற்றும் ஐந்தாவது ஒரு நாள் போட்டிகள் நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதாகவும் அதற்கேற்ப நடந்துகொள்ளுமாறும் கூறினார். ஆனால், நான் அதை மனதில் கொள்ளவில்லை. இதையடுத்தே எனக்கு மிரட்டல் வந்தது.

என்னை மிரட்டியது யார், எனது அணியில் ஆட்டம் நிர்ணயத்தில் ஈடுபட்டது யார் என்பது குறித்து நான் சொல்லவிரும்பவில்லை. நான் எனது நாட்டை தாய் போல நினைக்கிறேன். எனது தாயை விற்க மாட்டேன். யாராவது அப்படிச் செய்வார்களா? எது எனக்குச் சரி என்றுபட்டதோ அதையே நான் செய்தேன். அவர்கள் சொன்னபடி நடக்க எனக்குப் பிடிக்கவில்லை. இதனால்தான் இங்கு வந்துவிட்டேன் என்று கூறியுள்ளார் ஹைதர்.



இந் நிலையில், ஹைதர் விவகாரத்தில் விசாரணை நடத்த 3 பேர்கொண்ட குழுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அமைத்துள்ளது. கடாபி அகமது தலைமையிலான அந்தக் குழுவில் சகீர்கான், வாசீம் அகமது ஆகியோர் இடம்பெற்றிருக்கிறார்கள். ஹைதர் ஏன் திடீரென அணியைவிட்டு வெளியேறினார். அதற்கான பின்னணி என்ன? என்பதை இந்தக் குழு கண்டுபிடிக்கும். அத்துடன், தற்போது லண்டனில் உள்ள அவரிடம் விளக்கம் கேட்கவும் குழு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் விசாரணைக்கு சர்வதேச கிரிக்கெட் சபையும் (ஐ.சி.சி.) உதவத் தயாராக இருப்பதாக அதன் தலைமைச் செயலதிகாரி ஹரூன் லோர்கட் தெரிவித்துள்ளார். அத்துடன், சம்பந்தப்பட்ட வீரருக்கும் உதவ ஐ.சி.சி. முன்வந்துள்ளது.

இதே வேளை, அல்கர்னைன் ஹைதர் ஸ்கொட்லாந்து காவல்துறையினரின் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளார். சூதாட்டத் தரகர்களிடம் இருந்து மிரட்டல் வருவதாக அவர் வெளியிட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சூதாட்டத் தரகர்களுக்குப் பயந்து லண்டன் சென்றுள்ள அவர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் 4 ஆவது போட்டியில் விளையாடினார்.

சூதாட்ட விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் வீரர் ஹைதர், சர்வதேசப் போட்டிகளில் இருந்து விலகியுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவரை விசாரிக்க ஸ்கொட்லாந்து காவல்துறையினர் முடிவு செய்துள்ளதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இந்த விடயத்தில் அவருக்கு பாகிஸ்தான் அரசு எந்தவகையிலும் உதவாதென்று பாகிஸ்தானின் விளையாட்டுத்துறை அமைச்சர் இஜாஸ் ஹுசைன் ஜக்ரனி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;

ஹைதர் இங்கிலாந்தில் அடைக்கலம் பெறுவதற்கு பாகிஸ்தான் அரசு ஆதரவளிக்காது. அவரது நடவடிக்கைக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கமாட்டோம். மிரட்டல்கள் வந்திருந்தால் அவர் முதலில் எங்களிடம் வந்திருக்க வேண்டும். அவருக்கு அணி நிர்வாகத்திடமும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமும் நம்பிக்கையில்லை. இதுபோன்று அவர் பலவீனமானவராக பயந்தாங்கொள்ளியாக இருந்திருந்தால் முதலில் அவர் கிரிக்கெட் விளையாடி இருக்கக்கூடாது. குறிப்பாக தேசிய அணிக்கு வந்திருக்கக்கூடாது. பாகிஸ்தான் அணியில் இடம் பெற்றிருக்கும் ஒரு வீரர் இவ்வாறு நடந்து கொள்வது அழகல்ல. இதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உள்விவகாரங்களில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. ஆனால், நாட்டின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் ஏன் நடந்தது? என்பதை அறிய விரும்புகிறோம். இது தொடர்பாக முழு அறிக்கையைத் தரும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதியிருக்கிறோமென்றார்.

**ஏற்கனவே மிரட்டல்:**

கடந்த ஆண்டு நடந்த உள்ளூர் தொடரிலேயே ஹைதர் மிரட்டப்பட்ட விவகாரம் இப்போது தெரியவந்துள்ளது. இது குறித்து த கார்டியன் பத்திரிகையில் வெளியான செய்தியில்;

கடந்த ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானில் ஆர்.பி.எஸ்.கிண்ணத் தொடர் நடந்தது. இதில் லாகூர் ஈகிள்ஸ் அணியின் கப்டனாக ஹைதர் இருந்தார். அப்போது நஷனல் வங்கி அணிக்கெதிரான போட்டியில் உஸ்மான் சர்வார் என்ற வேகப்பந்து வீச்சாளரைச் சேர்க்க வேண்டுமென சூதாட்டக்காரர்கள் ஹைதரிடம் வலியுறுத்தினர். இதற்கு முன் அணியில் விளையாடாத வீரரை எப்படிச் சேர்ப்பது என மறுத்துள்ளார். இதனால் கப்டன் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரென்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹைதரின் விவகாரம் ஏற்கனவே சூதாட்டக்காரரால் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான் அணிக்கு மேலும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிண்ணம் யாருக்கு?

இலங்கை-மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான 'ஈ.ஆர்.ஐ.' டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் சாம்பியனாகும் அணிக்கு பீங்கானினால் (போர்ஸ்லின்) தயாரிக்கப்பட்டு தங்கம் மற்றும் பிளாற்றினத்தால் கவசமிடப்பட்ட சம்பியன் கிண்ணம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இச்சுற்றுப்போட்டி குறித்த செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்ற போது மேற்படி சாம்பியன் கிண்ணம் அறிமுகப் படுத்தப்பட்டது.

இச்சுற்றுப்போட்டிக்கு என்வயர்மன்ட் ரிசோர்ஸ் இன்வெஸ்ட்மன்ட் குழுமம் (ஈ.ஆர்.ஐ.) பிரதான அனுசரணை வழங்குகிறது. இக்குழுமத்தின் ஓர் அங்கத்துவ நிறுவனமான தங்கொட்டுவ போர்ஸ்லின் நிறுவனத்தால் இச்சம்பியன் கிண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஈ.ஆர்.ஐ.நிறுவனத்தின் தலைவர் லலித் ஹீன்கம தெரிவித்தார்.

பீங்கானினால் தயாரிக்கப்பட்ட இக்கிண்ணம் 24 கரட் தங்கம் மற்றும் பிளாற்றினத்தால் கவசமிடப்பட்டுள்ளது.

கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றுக்கு பீங்கானினால் தயாரிக்கப்பட்ட சம்பியன் கிண்ணம் வழங்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

இலங்கை அணியின் தலைவர் குமார் சங்ககார மேற்கிந்திய அணியின் தலைவர் டெரன் ஷமி ஆகியோரும் இச்செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.






ஒருநாள் போட்டிகளுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ள இத்தருணத்தில் என்வயர்மென்ட் ரிசோர்ஸஸ் இன்வெஸ்ட்மன்ட் போன்ற ஒரு முன்னணி நிறுவனம் இச்சுற்றுப் போட்டிக்கு அனுசரணை வழங்குவது குறித்து மகிழ்ச்சியடைவதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் (இலங்கை கிரிக்கெட்சபை) செயலாளர் நிஷாந்த் ரணதுங்க தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டின் பின்னர் முதற்தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மேற்கிந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகளிலும் 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது போட்டி கொழும்பு கெத்தாராம அரங்கில் நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மூன்றாவது டெஸ்ட் போட்டி டிசம்பர் முதலாம் திகதி முதல் பல்லேகல அரங்கில் நடைபெறவுள்ளது.

5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சுற்றுப்போட்டி டிசம்பர் 9 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. முதல் இரு போட்டிகள் 9,11 ஆம் திகதிகளில் அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய 3 போட்டிகள் 15,17,19 ஆம் திகதிகளில் கொழும்பு கெத்தாராம அரங்கில் நடைபெறவுள்ளன. டிசம்பர் 21 ஆம் திகதி 20 ஓவர் போட்டியொன்றில் இரு அணிகளும் விளையாடவுள்ளன.



## 'வெளிநாட்டுப் பெண்ணுடன் தொடர்பில்லை'

சில இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட புகைப்படங்களிலுள்ள வெளிநாட்டுப் பெண்ணுடன் தனக்குத் தொடர்பில்லையென இலங்கை அணி வீரரும் மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூர்ய, ஆங்கில இணையத்தளம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

தனது முதலாவது திருமணத்திற்கு முன்னர் நண்பர்களுடன் நியூஸிலாந்து சென்றபோது இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.



இதனிடையே ஜெயசூர்யாவின் முதலாவது திருமணத்தின் முறிவின் பின்னர் புகைப்படத்திலுள்ள பெண்ணுக்கும் ஜெயசூர்யாவுக்குமிடையில் உறவுகள் இருந்ததாகத கொசிபக லங்கா என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா செல்கிறார் பெக்காம்

இங்கிலாந்து தேசிய உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் அமெரிக்க குடியுரிமையைப் பெற விண்ணப்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

பெக்காம் அமெரிக்கக் கழகமான 'லா கெலக்ஸி' இல் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாடி வருகின்றார்.

இது தொடர்பாகத் தெரிவித்த பெக்காம், அமெரிக்க குடியுரிமையைப் பெற அவ[illegible] வுள்ளதாகவும் எனினும் தான் எப்பொழுதும் உண்மையான இங்கிலாந்து வாசியெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது மனைவி மற்றும் குழந்தைகள் இங்கு அதிக மகிழ்ச்சியுடன் உள்ளதாகவும் அதன் காரணமாகவே இம்முடிவை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியவாசிகளுக்கு இரட்டைக் குடியுரிமை பெறுவதற்கு அனுமதியுண்டு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆசியப் போட்டி மிகவும் கடினமானது'

ஆசிய விளையாட்டு மிகவும் கடினமானதென்று கூறிய சாய்னா நேவால் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேனென்று கூறியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் குவாங்சோ நகரில் 12 ஆம் திகதி தொடங்கி 27 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக சாய்னா நேவால், காஷியாப் தலைமையிலான இந்திய பட்மின்றன் அணி சீனா புறப்பட்டுச் சென்றது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய சாய்னா, ஆசிய விளையாட்டு கடினமானது. கொமன்வெல்த் போட்டியுடன் ஒப்பிடும் போது ஆசிய விளையாட்டில் போட்டி கடினமாக இருக்கும்.

அத்துடன் சொந்த நாட்டு ரசிகர்களின் முன்னிலையில் சீன வீர, வீராங்கனைகள் கடும் சவால் அளிப்பார்கள். ஆனால் நான் போட்டிக்குச் சிறப்பாகத் தயாராகியிருக்கிறேன். எனது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பேன்.

கொமன்வெல்த் போட்டிக்குப் பிறகு இப்போது இன்னும் எனது ஆட்டத்திறன் மேம்பட்டிருப்பதை உணருகிறேன். எனவே ஆசிய போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வேன் என்று நம்புகிறேன். முடியாதது எதுவுமில்லையென்றும் கூறினார்.

கொமன்வெல்த் போட்டியில் சாய்னா தங்கப்பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் தேர்தல்

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

இராணுவ ஆட்சியின் கோர முகத்தை ஜனநாயகம் என்னும் அழகான முக மூடிக்குள் மறைப்பதற்கான முயற்சிகளை மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் அரங் கேற்றியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை [நவம்பர் 7] இங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பை 20 வருடங்களின் பின்னர் முதல் முறையாக நடைபெறும் ஜனநாயக ரீதியிலான தேர்தலென அந்நாட்டு அரசாங் கம் வர்ணித்துள்ளது.

ஆனால் இத் தேர்தலில் ஜனநாயகத்தின் பங்களிப்பு எத்தகையது என்பதை ஆராய்ந் தால் அதற்கான விடை நகைப்புக்கிடமான தாகவே அமையும்.

இராணுவத்தின் வசமுள்ள அதிகாரத்தை ஜனநாயக ஆட்சியிடம் கையளிப்பதற்கான தேர்தலென இராணுவ ஆட்சியாளர்கள் இதனை விபரித்திருந்த போதிலும் ஜனநாய கத்தின் போர்வையில் இராணுவத்தின் கரங் களை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சி யாகவே இத் தேர்தல் உலகளாவிய அரசியல் அவதானிகளால் நோக்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக 1990 இல் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகத்தின் விம்பமென வர்ணிக்கப்படுப வரும் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவருமான ஆங் சான் சூ கி தலைமை யிலான ஜனநாயகத்திற்கான தேசிய லீக் என்னும் கட்சி அமோக வெற்றி பெற்றது.





ஆனால் இவ் வெற்றிக்குப் பரிசாக சூ கிக்கு கிடைத் தது சிறைவாசம் மட்டுமே இவரது கட்சி ஆட்சியமைக்க ஒருபோதுமே இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதிக் காத அதேவேளை இதன் பின்னரான பெரும்பாலான காலப்பகுதியை சூ கி தடுப் புக் காவலிலேயே கழித்து வருகிறார்.

இந் நிலையில் 'ஜனநாயகத்திற்கான' வரைபடம் என்ற அழைப்புடன் புதிய அரசிய லமைப்பை வரைந்த இராணுவ அரசாங்கம் நாட்டில் மக்களாட்சியை கொண்டு வருவ தாக உறுதியளித்தது.

இந்த அரசியலமைப்பின் பிரகாரம் இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றமும் 14 பிராந்திய சபைகளும் 29 மில்லி யனுக்கும் அதிகமான வாக்காளர் களால் தெரிவு செய்யப்படும் .இதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட் டின் ஜனாதிபதியையும் இரு துணை ஜனாதிபதிகளையும் தெரிவு செய்ய ஜனாதிபதி அமைச்சரவை மற்றும் ஏனைய முக்கிய பதவிகளுக்கான நியமனங்களை மேற்கொள்வார்.

இதேவேளை இவ் அரசியலமைப்பின் பிரகாரம் அனைத்து சபைகளிலும் இரா ணுவத்திற்கு 25 வீதமான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அரசியலமைப் பில் ஏதாவது திருத்தங்களை மேற்கொள்வ தற்கு சபையில் 75 வீதத்திற்கும் அதிகமான பெரும்பான்மை ஆதரவு அவசியமாகும்.

மேலும் உள்துறை,பாதுகாப்பு மற்றும் எல்லை விவகாரம் போன்ற முக்கிய அமைச் சுக்களின் அதிகாரம் பதவியிலிருக்கும் இரா ணுவத் தளபதிகள் வசமே இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இராணுவ அதிகாரத்தின் பிடி சற்றும் தளராத வகையில் ஜனநாயக முலாம் பூசப்பட்டு வரையப்பட்ட இவ் அரசியலமைப் பானது,ஆங் சான் சூ கியையும், ஜனநாயக ஆர்வலர்களையும் அரசியலிலிருந்து ஒதுக் கும் வகையிலான புதிய தேர்தல் சட்டங்க ளையும் அறிமுகப்படுத்தியது.

இத் தேர்தல் சட்டத்தின் நீதிமன்றத்தால் குற்றஞ் சாட்டப்பட்டவர்களும் வெளிநாட்டி னரை திருமணம் செய்தவர்களும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிக்கப்பட்டது சூகி பிரிட்டன் நாட்டவரைத் திருமணம் செய்திருந்தமையால் அவரை இலக்கு வைத்தே இச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந் தது.

மேலும் சூ கியின் ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சி தேர்தலில் போட்டியிட வேண்டுமானால் 1990 இல் இக் கட்சி பெற்ற வெற்றியை இரத்து செய்தமைக்கான இராணுவ ஆட்சியாளர்களின் தீர்மானம் சரியானது என இக் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் நிர்பந்திக்கப்பட்டது.

மேலும் தேர்தலைப் பகிஸ்கரிக்கும் கட்சி கள் இராணுவ அதிகாரிகளால் கலைக்கப்ப டுமென்பதும் புதிய தேர்தல் சட்டத்தின் ஒரு விதியாகும்.

இதனைத் தொடர்ந்து அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் தேர்தல் சட்டங்களின் நிபந்தனைகளையும் ஆராய்ந்த பிரதான எதிர்க்கட்சியான சூ கியின் கட்சி தேர்த லைப் பகிஷ்கரிப்ப தென்ற வலிமிக்க தீர்மா னத்தை அறிவித்ததைத் தொடர்ந்து அக்கட்சி பலவந்தமாக கலைக்கப் பட்டது.

**ஜனநாயகப் போர்வைக்குள் பலம் பெறும் இராணுவக் கரங்கள்**

தேர்தலில் தமக்கு சவாலாக விளங்குமெனக் கருதிய கட்சி தேர்தலைப் பகிஷ்கரித்தலைத் தொடர்ந்து தேர்தலுக்கான ஏற்பாடுகளை இராணுவ அதி காரிகள் தீவிரமாக மேற்கொண்டனர்.

இதன் பிரகாரம் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து சபைகளுக்குமான 1160 ஆச னங்களுக்கு மூவாயிரத்திற்கும் அதிகமான வேட்பாளர்கள் களமிறங்கினர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இராணுவ ஆதர வுக் கட்சிகளால் களமிறக்கப்பட்ட இராணுவ சார்பாளவரானர்.

இத் தேர்தலில் போட்டியிட்ட மூன்றில் இரண்டு பங்கு வேட்பாளர்கள் இராணுவ சார்புடையவர்களென்பதால் பாராளுமன்றத் திலும் இராணுவ பிரசன்னம் தேவையான அளவுக்கு இருக்குமென எதிர்பார்க்கப்படுகி றது.

இதற்கிடையில் பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற் கான சாத்தியங்களை முழு அளவில் கொண் டுள்ள இராணுவ ஆட்சியாளர் தான்ஸ்வே இத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இராணுவத்திற்குச் சார்பான இரு கட் சிகளும் ஏனைய இரு சிறு ஜனநாயக கட்சிகளும் போட்டியிட்ட இத் தேர் தலுக்கான வாக்களிப்புக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

வாக்களிப்பைத் தொடர்ந்து இராணுவ சார்பு கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு அரச பணியாளர் களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட் டமை உள்ளிட்ட பல மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது டன் வாக்களிப்பு வீதமும் மிகக் குறைவாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தேர்தலை நிராகரித்துள்ள மேற்குலக நாடு கள் இது சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் நடைபெறவில் லையெனக் குற்றஞ்சாட்டியுள்ள துடன் சர்வதேச தர நியமங்களை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் தெரிவித் துள்ளன.

இந் நிலையில் தேர்தலின் உத்தியோக பூர்வ முடிவுகள் இக் கட்டுரை எழுதப்படும் வரை வெளியிடப்படாதபோதும் 80 வீதமான ஆசனங்களை தாம் வெற்றிகொண்டுள்ள தாக இராணுவ ஆதரவுக் கட்சிகள் தெரிவித் துள்ளன.

இத் தேர்தலில் வெளிப்படைத் தன்மை போதியளவுக்கு இருக்கவில்லையெனத் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலர் பான்-கி மூன் ஆங் சான் சூ கியையும்,ஏ னைய 2 ஆயிரம் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதனூடாக ஜனநாயகத் திற்கான ஆரம்பத்தை ஆட்சியாளர்கள் நிரூபிக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

சூ கியை நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்யுமாறு அமெ ரிக்க,ஐரோப்பிய நாடுகளும் அழைப்பு விடுத்துள்ள நிலை யில் விடுதலை செய்யப்பட் டாலும் அவர் தொடர்ந்தும் நாட்டில் இருக்கும் பட்சத் திலேயே ஜனநாயக செயற் பாடுகளை முன்னெடுக்க முடியுமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் ஒன்றன் பின் ஒன்றாகக் குற்றச்சாட் டுச் சுமத்தப்பட்டு 14 வருடங் களுக்கும் மேலாக நீடிக் கப்பட்ட சூ கியின் இறுதி வீட்டுக்காவல் தண்டனை இன்று அதாவது நவம்பர் 13 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது.

சூகியின் தடுப்புக்காவல் இன்றுடன் முடிவுக்கு வருமா அல்லது மேலும் நீடிக்கப் படுமா என்பது தெளிவாகாத நிலையில் சூ கியின் விடுதலைக்கான ஏற்பாடுகள் நடை பெறுவதாக உயர்மட்டங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் தமது ஜனநாயக நாடகத்தை சிறப்பாக அரங்கேற்றுவதற்கு இராணுவ ஆட்சியாளர்கள் சூ கியை விடுதலை செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் பாராளுமன்றத்திலும் இராணுவ அதிகாரம் செறிந்திருப்பதற்கு வழிவகுக்கும் அரசியலமைப்பே அமுலில் உள்ளதால் இன் னும் பல வருடங்களுக்கு இங்கு முழுமை யான ஜனநாயகப் பண்புகளை எதிர்பார்க்க முடியாது என்பதையே நிகழ்வுப் போக்குகள் வெளிப்படுத்தியுள்ளன.

இராணுவ அரசொன்றின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பதை எதிர்வு கூறுவது சாத்தியமற்ற தொன்றாக இருக்கும் நிலையில் சூ கியை விடுதலை செய்வதன் மூலம் அவரையும் அவரது கட்சியையும் சுதந்திரமாகச் செயற் பட அனுமதிப்பதே உண்மையான ஜனநாயக மாற்றத்தை நோக்கிய முதலாவதும் முக்கிய மானதுமான நகர்வாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை படிப்பகம்











பிரியாமணி

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15 [illegible] 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org